Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 16 | ஹிஜ்ரி 1427 | ஸபர் 29 | (30.03.2006) | வியாழக்கிழமை | இதழ் 180


யாழ்.நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# கட்டுநாயக்க ஊடான பயணத்துக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வேண்டும்!



## எரிக் சொல்ஹெய்மிடம் பாலா தெரிவிப்பு

லண்டன்—

கொழும்பு ஊடாக ஜெனிவாவுக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் செல்வதற்கு இலங்கை அரசும் - நோர்வேயும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கினாலேயே ஏப்ரல் பேச்சுக்களில் பங்கேற்க முடியும் என நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிடம் விடுதலைப் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுக்காலை 11 மணியளவில் லண்டனிலுள்ள அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நோர்வேயின் புதிய விசேட தூதுவராக நியமிக்கப்பட்ட ஜோன் ஹன்சன் பௌயரை - எரிக் சொல்ஹெய்ம் இந்தச் சந்திப்பின்போது கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

சுமார் 2 மணிநேரம் நிகழ்ந்த இந்தப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுச் செயலாளர் அடேல் பாலசிங்கமும் உடனிருந்தார்.

இதன்போது ஜெனிவா இணக்கப்பாட்டை புறந்தள்ளிவிட்டு போர் நிறுத்த உடன்படிக்கைக்கும், விதிமுறைகளுக்கும் முரணாகத் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்தவின் நிலைப்பாட்டை அறியவே கொழும்பு வருகிறார் சொல்ஹெய்ம்!

## பி.பி.சி பேட்டியில் அவர் தெரிவிப்பு

லண்டன்—

ஜெனீவா பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கும், புலிகளின் நிலைப்பாட்டை எடுத்து விளக்குவதற்குமே தான் கொழும்பு வரவுள்ளதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தியமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

லண்டனில் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்திய பின்னர் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இது குறித்து மேலும் கருத்து வெளியிடுகையில் -

ஜெனீவாவில் ஏப்ரல் 19 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை நடக்க இருக்கின்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தப் படுத்தவே இந்தச் சந்திப்பு நடைபெறுது. இந்தச் சந்திப்பில் முக்கியமாக விவாதிக்கப்பட்ட விடயம் ஜெனீவாவில் முதல்சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது இரண்டு தரப்புக்களும் ஏற்றுக்கொண்ட விடயங்களை முழுவதுமாக அமுல்படுத்துவது பற்றித்தான்.

கேள்வி:- ஜெனீவாவில் பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்ட விடயங்களில் இரு தரப்பும் நடந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சொல்ஹெய்ம்-பௌயர் அடுத்த வாரம் வருகை!

கொழும்பு—

சமாதான முயற்சிகள் தொடர்பாக இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்களை நடத்த நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும், புதிய விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரும் அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளனர்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் வெளியட்ட அறிக்கையில்:-

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் எதிர்வரும் 3 ஆம் திகதி நான்கு நாட்கள் பயணமாக இலங்கைக்கு வருகைதரவுள்ளார். அவரது முதலாவது இலங்கைப் பயணம் இதுவாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகளுடன் ஹன்சன் பௌயர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

ஏப்ரல் 6 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எரிக் சொல்ஹெய்மும், பௌயரும் சந்தித்துப் பேசவுள்ளனர். இதற்கு முன்னர் பௌயர் ஏப்ரல் 5 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவார்.

அத்துடன் 8 ஆம் திகதி ஒஸ்லோ திரும்பும் வழியில் பௌயர் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசவுள்ளார்.

லண்டன்—

ஜெனிவா பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கும், புலிகளின் நிலைப்பாட்டை எடுத்து விளக்குவதற்குமே தான் கொழும்பு வரவுள்ளதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தியமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

லண்டனில் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்திய பின்னர் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இது குறித்து மேலும் கருத்து வெளியிடுகையில் -

ஜெனிவாவில் ஏப்ரல் 19 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை நடக்க இருக்கின்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தப்படுத்தவே இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் முக்கியமாக விவாதிக்கப்பட்ட விடயம் ஜெனிவாவில் முதல்சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது இரண்டு தரப்புக்களும் ஏற்றுக்கொண்ட விடயங்களை முழுவதுமாக அமுல்படுத்துவது பற்றித்தான்.

கேள்வி:- ஜெனிவாவில் பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்ட விடயங்களில் இரு தரப்பும் நடந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

...பெளயரும் அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளனர்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் வெளியட்ட அறிக்கையில்:-

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பெளயர் எதிர்வரும் 3 ஆம் திகதி நான்கு நாட்கள் பயணமாக இலங்கைக்கு வருகைதரவுள்ளார். அவரது...

...ஹெய்மும், பெளயரும் சந்தித்துப் பேசவுள்ளனர். இதற்கு முன்னர் பெளயர் ஏப்ரல் 5 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவார்.

அத்துடன் 8 ஆம் திகதி ஒஸ்லோ திரும்பும் வழியில் பெளயர் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசவுள்ளார்.

## நாளைய இதழில்

க. பொ.த. உயர்தர மாணவர்களுக்கான ஜோதீஸ்வரனின் இந்து நாகரிகம் - ஞானேந்திரனின் உயிரியல் மாதிரி வினாத் தாள்கள் வெளிவரும்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

# இன்று உள்ளூராட்சித் தேர்தல்!

கொழும்பு—

ஆறு மாவட்டங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

266 உள்ளூராட்சி சபைகளுக்கான இந்தத் தேர்தலுக்காக 8 ஆயிரத்து 829 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

12 மாநகர சபைகள், 34 நகர சபைகள் மற்றும் 220 பிரதேச சபைகளின் 3 ஆயிரத்து 624 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

தேர்தல் பணிகளில் 80 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கின் 2 மாநகர சபைகள், 6 நகரசபைகள், 37 பிரதேச சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளால் 21 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் 4 ஆயிரத்து 442 பதவிகளுக்காக 23 ஆயிரத்து 331 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 5 ஆயிரத்து 272 பேர் சுயேட்சை வேட்பாளர்களாவர்.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக பவ்ரல் அமைப்பின் சார்பில் 15 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் தூதுவருடன் அமைச்சர் நிமால் பேச்சு

கொழும்பு—

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் பேர்னாடினோ ரெகஜ்ஜோனியுடன் - அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பேச்சுக்களை நடத்தினார்.

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் -

ஜெனிவாவில் ஏப்ரல் 3 ஆம் வாரம் நடைபெறவுள்ள பேச்சுக்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் படைப்பிரிவுக்கு ஹெல உறுமய எதிர்ப்பு!

கொழும்பு—

இராணுவத்தில் தனியான முஸ்லிம் படைப்பிரிவு அமைக்கப்படுவதற்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவெல மேதானந்த தேரர் கருத்து வெளியிடுகையில் -

முஸ்லிம் படைப்பிரிவு அமைக்கப்படுவதன் விளைவாக இனவாதம் தான் மேலோங்கும். பாதுகாப்புப் படைகளில் இன அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படக்கூடாது.

இதன் விளைவாக தீவிரவாதம் மேலும் வலுப்பெறுமெனத் தெரிவித்தார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரோ கருத்து வெளியிடுகையில் - பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தவறிவிட்டது. இதன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கொக்குகள் இறப்பு; பறவைக் காய்ச்சலா என பீதி!

மன்னார்—

மன்னார் பொலிஸ் நிலையத்தின் முன்பாக நின்ற மரத்தின் கீழ் பல கொக்குகள் திடீரென இறந்ததால் மன்னார் மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் பீதி ஏற்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் நிலையத்தின் முன்பாக நின்றிருந்த மரத்தின் கீழ் மர்மமான முறையில் கொக்குகள் இறந்திருந்ததையடுத்து - மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம். கதிர்காமநாதன், விலங்கு உற்பத்தி சுகாதார பணிப்பாளர் டொக்டர் அமரசேகரவுக்கு உடனடியாக தெரியப்படுத்தினார்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்று கொக்குகளைப் பாதுகாப்பாக சேகரித்து தமக்கு அனுப்புமாறு சுகாதார திணைக்கள பணிப்பாளர் அமரசேகர மாவட்ட



அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதன் பின்னர் சம்பவ இடத்துக்கு மாவட்டஅதிகாரி கதிர்காமநாதன் தலைமையில் வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சூட்டில் மீனவர் படுகாயம்!

மட்டக்களப்பு—

ஏறாவூர் - புன்னக்குடா கடற்பரப்பில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை மீனவர்கள்மீது இராணுவத்தினர் துப்பாக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிதைவடைந்த வரலாற்றுச் சின்னங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். நகரில் சிதைவடைந்து வரும் வரலாற்றுச் சின்னங்களைப் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். நகரில் புகையிரத நிலையம், திறந்த வெளியரங்கு, நகர மண்டபம் போன்ற வரலாற்றுச்சின்னங்கள் 45 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டவையாகும். இந்த வரலாற்றுச் சின்னங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக முற்றாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.


நகரின் பண்பாட்டுச்சின்னங்களான இவற்றை எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் புனரமைப்பு செய்ய வேண்டியது முக்கிய கடமைப்பாடாகும்.

இதேவேளை, நகரமண்டபம் ஒன்று அமைக்கப்படாததால் பல் வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கு தனியார் மண்டபங்களையே பயன்படுத்தவேண்டியுள்ளது. அவ்வாறு பயன்படுத்துகின்ற போதிலும் - ஒலி, ஒளி வசதிகள், இருக்கை வசதிகள் இல்லாத மண்டபங்களே காணப்படுகின்றன.

யாழ்.நகரில் மக்களின் தேவைக்கேற்ப நகர மண்டபம் ஒன்று அமைக்க வேண்டியது அவசியமாகிறது.

அதேவேளை, பண்பாட்டு வரலாற்று சின்னமாக கருதப்படுகின்றவற்றை பேணிப் பாதுகாக்கவேண்டியது எல்லோருடைய பொறுப்பாகும் எனத் தெரிவித்தார். (வ)

# பட்டப்பின் டிப்ளோமா கற்கைக்கு படிவம் பெற முண்டியடிக்கும் ஆசிரியர்கள்



யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை பெறுவதற்கு பெருமளவான ஆசிரியர்கள் திறந்த பல்கலைக் கழகத்தில் காத்திருந்த போதும் - பெருமளவானோர் விண்ணப்பங்களைப் பெறமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பினர். பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கையை ஆரம்பிப்பதற்கு வட- கிழக்கில் 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் இருக்கின்றபோதும் திறந்த பல்கலைக்கழகத்துக்கு 200 இற்கும் குறைவான விண்ணப்பங்களே அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதனால் விண்ணப்பங்களைப் பெறுவதற்காக பெருமளவான ஆசிரியர்கள் அங்கு சென்றபோதும் விண்ணப்பங்களைப் பெறமுடியாது நீண்ட நேரத்தின் பின்னர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

(110, நி)

# வன்னியிலிருந்து வரும் மக்கள் மீது புங்குடுதீவில் கடற்படையினர் கெடுபிடி

நெடுந்தீவு —

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து தீவுப்பகுதிகளுக்கு வரும் மக்கள்மீது புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியிலுள்ள கடற்படையினர் கடும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் விபரங்களையும் பதிவுசெய்வதால் அங்கிருந்து வரும் மக்கள் தீவுப் பகுதியிலுள்ள உறவுகளைச் சந்திக்கவருவதற்கும் அச்சமடைந்துள்ளனர்.

தீவகத்துக்குள் நுழையும் போதும் அங்கிருந்து வெளியேறும் போதும் மடத்துவெளிப் பகுதியில் கடற்படையினர் பயணிகளை சோதனை செய்து வருகின்றனர். இதன்போது அடையாள அட்டையில் சொந்தஇடம் வதிவிடம் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதி என இருந்தால் அவர்களது உடமைகள் துருவி ஆராயப்படுவதுடன் பேர்ஸ் பறிக்கப்பட்டு அதிலுள்ள ஆவணங்கள் சோதனையிடப்படுகிறது.

அதில் புலிகளால் வழங்கப் படும் பயண அனுமதியட்டை இருந்தால் சோதனை கெடுபிடிகள் மேலும் அதிகமாக உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சில இளைஞர்களிடமிருந்து பயண அனுமதி அட்டை பறிக்கப்பட்ட சம்பவங்களும் இந்தச் சோதனைச் சாவடியில் இடம்பெற்றுள்ளது. வயது வேறுபாடின்றி அனைவரது விபரங்களும் தங்கிநின்ற, தங்கி நிற்கும் இடங்களது விபரங்களும் கடற்படையினரால் சேகரிக்கப்படுகின்றன.

கடற்படையினரது இந்தச் செயற்பாட்டால் வன்னிப் பகுதியிலிருந்து தீவுப்பகுதிக்கு வரும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் வந்து செல்லவும் பின்னடிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (113)

# வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு!

உடுவில் —

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கான பதிவுகளும் தொழில் வழிகாட்டற் கருத்தரங்கும் நாளை காலை 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத இளைஞர், யுவதிகள், தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ் என்பனவற்றின் மூலப் பிரதியுடனும் நிழற் பிரதியுடனும் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் சு.முரளிதரன் தெரிவித்தார்.

# திரைப்பட வட்ட ஏற்பாட்டில் வீடியோ படக்காட்சிகள்!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தினரது ஏற்பாட்டில் எதிர்வரும் 2ஆம் திகதி மற்றும் 4 ஆம் திகதியும் பிற்பகல் 4 மணிக்கு உலகப் புகழ் பெற்ற ஜப்பானிய நெறியாளர் அக்கிரோ குறோசோவா இன் Throne of Blood (அரியணையின் இரத்தம்) எனும் திரைப்படம் வீடியோக காட்சியாக அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் (ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை) இத்திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது. ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் நாடகமொன்றின் கதையை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இப்படம் சர்வதேச விருதுகள் பலவற்றைப் பெற்றதாகும்.

படக்காட்சிகயின் இறுதியில் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# தேசிய அடையாள அட்டை யாழ். செயலகத்துக்கு வந்தது

யாழ்ப்பாணம் —

கடந்த ஆண்டு 2005 டிசெம்பர் மாதப் பகுதியில் பாடசாலை ஊடாக தேசிய அடையாள அட்டையை விண்ணப்பித்தவர்களில் 33 தொகுதியினரின் தேசிய அடையாள அட்டைகள் யாழ்.செயலக ஆட்பதிவு திணைக்களத்துக்கு வந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாத பகுதியில் விண்ணப்பித்த அடையாள அட்டைகளின் ஒரு தொகுதி வந்துள்ளதால் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும், ஏனையவை காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும் எனவும் கொழும்பு ஆட் பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி)

# அழிவடைந்து வரும் காளிகோயில் குளம்



யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி பகுதியில் அமைந்துள்ள காளி கோயில் குளம் தாமரை செடி மற்றும் தாவரச் செடிகளால் நிறைந்து வருவதால் குளம் உடைந்து சுற்றுச்சூழல் மாசடைந்து வருகிறது.

இந்தக் குளத்தின் வாய்க்கால் பகுதி கள் சேதமடைந்து உள்ளதோடு அந்தப் பகுதிகளில் குப்பைகள், பொலித்தீன் பைகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுகிறது.

4 மாதங்களுக்கு முன்னர் செடிகள் அகற்றப்பட்ட போதிலும் செடிகள் பரவலாக வளர்ந்து பற் றைக் கடாகக் காணப்படுகிறது. குளத்தின் சுற்றுப்புற அணைக்கட்டுக்கள் மண் அரிக்கப்பட்டுள்ளது.

அழிந்துவரும் இந்தக் குளத்தினைப் புனரமைப்பு செய்து அழிவடையாது பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுப்பார்களா? என பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (நி. த)

# யாழ்.நகரில் கடும் மழை

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று கடும் மழை பெய்துள்ளது.

மாலை 3.45 மணிக்கு ஆரம்பித்த இந்த மழை சுமார் 1 மணித்தியாலம் வரை நீடித்தது.

இதனால் யாழ்.நகர் பகுதியில் சில மணி நேரம் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது.

# யாழ்.நகர் முகாம்களை பலப்படுத்தும் இராணுவம்

யாழ்ப்பாணம் —

யாழ்.நகர பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மற்றும் காவலரண்கள் புனரமைக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் பிறவுண் வீதிச்சந்தியில் உள்ள இராணுவ முகாமும் கொங்கிறிற் கல் மண்மூலம் புனரமைக்கப்பட்டு பலப்படுத்தப்படுத்தப்படுவதுடன் இந்த இராணுவ முகாம்களில் பெருமளவு இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு இராணுவத்தினர் காவலரண்களை அமைத்து வருவதால் மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. (நி)

# பச்சை மரப்பாடுகள் நாடகம் இன்று

கொக்குவில் —

குருநகர் யோசெப்வாஸ் இளைஞர் மன்றத்தின் கன்னிப்படைப்பான பச்சைமரப் பாடுகள் என்னும் திருப்பாடுகளின் காட்சிகளைக் கொண்ட நாடகம் இன்று இரவு 7மணிக்கு நடைபெற வுள்ளது.

யாழ்-பிரதானவீதி, புனித யாகப்பர் ஆலய முன்றலில் விசேடமாக நிறுவப்பட்ட 150அடி நீள மேடையில் 100க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்கு கொள்கின்றனர். (206)

# வருடாந்த மஹோற்சவம்

மானிப்பாய் —

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று அடுத்த மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை ரதோற்சவமும் மறு நாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.





காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த



மெர்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.30, 6.30,9.00

நிறைஞ்சனாஸ் சங்கானை

ஜெயம் புகழ் ரவி, கம்னா, பிரகாஸ் ராஜ் நடித்த

இதயத்திருடன்

கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

விஷால், மீரா ஜஸ்மின் நடித்த

சண்டைக் கோழி

கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


# பணிநிலை வேண்டுகை

**1. பக்க வடிவமைப்பாளர்**

Page maker, photoshop, corel draw தெரிந்தவர்களும் பத்திரிகை துறையில் அல்லது அச்சகத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் 03/04/2006 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

**2. கணினி தட்டச்சாளர்**

கணினியில் வேகமாக தட்டச்சு செய்யக்கூடியவர்கள் இப்பணிநிலைக்கு 03/04/2006 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

*குறிப்பு : மேற்படி விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பணிநிலையை எழுதி அனுப்பவும்.*

**3. இயந்திர இயக்குநர்**

ஓவ் செற் மிசின் (சொலனா, கோட்) ஆகிய இயந்திரங்களை இயக்கக்கூடியவர்களும், அச்சகத்துறையில் or பத்திரிகைத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் அனுபவ சான்றிதழுடனும் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழுடனும் 03/04/2006 ஆம் திகதி காலை 10 மணிக்கு அலுவலகத்துக்கு சமுகமளிக்கவும்.

**4. இயந்திர பயிற்சியாளர்**

இப்பணிநிலைக்கு ஆர்வமுள்ளவர்கள் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழுடன் 03/04/2006 ஆம் திகதி காலை 10 மணிக்கு சமுகமளிக்கவும்.

நிர்வாக இயக்குனர்,
நமது ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

# புலிகளை ஏக பிரதிநிதிகளாக சர்வதேசத்துக்கு காட்டியவர்கள் முட்டாள் அரசியல்வாதிகளே!

## என்கிறார் எல்லாவல மேதானந்த தேரர்



கொழும்பு —

வடக்கில் உள்ள பயங்கரவாதிகளை ஏக பிரதிநிதிகள் என்றும், சிங்கள மக்களின் உரிமைகளையும், தேவைகளையும் பற்றிப் பேசும் ஜாதிக ஹெல உறுமயவினரை மதவாதிகள் என்றும், தேசியவாதிகள் என்றும் அழைப்பதற்கு காரணம் பயங்கரவாதத்தை இனப்பிரச்சினையாக சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டிய முட்டாள் அரசியல்வாதிகளே என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

பேலியகொட நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் - இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதமே உள்ளது. புலிகள் பயங்கரவாதக்குழுவே அன்றி தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல, பிரிவினைவாத புலிகளை ஒரு போதும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜாதிக ஹெல உறுமய சிங்கள மக்களினதும், ஏனைய இன மக்களினதும் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் தேசிய இயக்கமாகச் செயற்படும்.

புலிகளையும், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களையும் தோல்வியடையச் செய்து தேசத்தைப் பாதுகாக்கும் உணர்வுடன் இம்முறை தேர்தலில் மக்கள் செயற்படவேண்டும்.

இலங்கையில் இனப்பிரச்சினையொன்று இல்லை. வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். அப்படி இருக்கையில் எப்படி இனப்பிரச்சினை நாட்டில் இருக்க முடியும்? எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க உரையாற்றுகையில் -

வடக்கு - கிழக்கு பௌத்த சிங்கள மக்களின் பூர்வீக பூமியாகும், இந்த நாட்டுக்கு துரோகமிழைத்த ஜெ.ஆர். ஜெயவர்த்தன கைச்சாத்திட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமே தமிழர்களின் பூமியாக வடக்கு - கிழக்கு மாறுவதற்குக் காரணம்.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டு சிங்கள மக்களின் பூர்வீக பூமி மீட்கப்பட வேண்டும். பௌத்தர்களின் பூமியே வடக்கு - கிழக்கு என்பதற்கு அந்தப் பகுதிகளில் இருக்கும் மதவழிபாட்டுத்தலங்களே ஆதாரமாகும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அனைத்து கட்சிகளும் வடக்கு - கிழக்குப் பற்றி பேசுகின்றன. ஆனால் நாம் மட்டுமே வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட வேண்டுமென்ற யதார்த்தம் பற்றி பகிரங்கமாக பேசுகிறோம்.

முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய சில கட்சிகளும் பிரபாகரனுக்குப் பயந்து வாய்மூடி மௌனித்து விட்டன. வடக்கையும், கிழக்கையும் இரு வேறு மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும். இதற்கான பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் நாம் கொண்டு வரவுள்ளோம்.

எனவே, வடக்கு - கிழக்கை பிரித்து சிங்கள பூமியை பாதுகாத்து அனைவரும் வாழக்கூடிய பூமியாக அதனை மாற்றுவதற்கு இந்தத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு வாக்களிக்க மக்கள் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெண்களை ஏமாற்றியவர் பொலிஸாரால் கைது!

மகியங்கனை —

இராணுவ அதிகாரியாகவும், விசேட வைத்திய நிபுணராகவும் தன்னை அடையாளப்படுத்தி - பெண்ணொருவரை ஏமாற்றி பணம் மற்றும் தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்ட சந்தேகநபர் ஒருவரை மகியங்கனை பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதான இந்த சந்தேகநபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இராணுவ அதிகாரியாகத் தன்னை அடையாளப்படுத்தி போரில் உயிரிழந்த படையினரின் குடும்பங்கள் மற்றும் உறவினர்களை ஏமாற்றியுள்ளார்.

உயிரிழந்த படையினருக்கு நஷ்டஈட்டுத் தொகையைப் பெற்றுத்தருவதாகக் கூறி இவர் ஒரு குடும்பத்திடம் தலா 18 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட சந்தேகநபர் வைத்தியராக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு பிரசித்தமான இடங்களில் காத்திருந்து பெண்களை ஏமாற்றியுள்ளார்.

பெண்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அவர்களிடமுள்ள பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையிட்டதாக தெரியவருகிறது. பாதிக்கப்பட்ட பெண்கள் செய்திருந்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (01)

# கற்பிட்டிச் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழு விசாரணை!



கொழும்பு —

கற்பிட்டிக் கடற்பரப்பில் கடற்படையினரின் அதிவேக தாக்குதல் படகு வெடித்துச் சிதறிய சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலவ்ஸ்டோட்ரயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தச் சம்பவத்துடன் தொடர்பு படவில்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். எமது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுக்கு இதில் தொடர்பில்லையெனக் கூறமுடியாது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி இருதரப்பினரிடமும் கேட்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்ததென்றும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்களை தடுப்பது குறித்துமே எமது விசாரணைகளில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு - கிழக்கு பயணத்தை

# தவிர்க்குமாறு பிரித்தானிய பிரஜைகளுக்கு அறிவுறுத்து

கொழும்பு —

இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிரித்தானியா தமது பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பிரித்தானிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் -


இலங்கையில் உள்நாட்டில் பயங்கரவாத நிலை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் தற்சமயம் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, பாதுகாப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்ற வேண்டும். இலங்கையில் பதிவு பெற்று பணிபுரிகின்ற மற்றும் ஒரு மாதத்துக்கு மேல் தங்கியுள்ள பிரித்தானிய பிரஜைகள் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அதே நேரம் வடக்கு - கிழக்குக்கான விஜயத்தை மேற்கொள்ளும் போது, உரிய மருத்துவ காப்புறுதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரித்தானிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம் தமது நாட்டு பிரஜைகளை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு வெட்டுப்புள்ளியில் நியாயம் கிடைக்கும்

## என்கிறார் கல்வி அமைச்சர்



கொழும்பு —

இரசாயனவியல் பாட மீள்மதிப்பீட்டின் பின் வெளியாகும். வெட்டுப்புள்ளியின்படி பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கோரிக்கை நிவர்த்தியாகுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 10 மாணவர்கள் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த.மகாசிவத்தின் தலைமையில் கல்வி அமைச்சரைச் சந்தித்தனர்.

கொழும்பிலுள்ள நுகேகொட தொகுதி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்ற போது தமிழ் மொழி மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் மாவட்ட கோட்டாவில் தமிழ் மாணவர்கள் கடும் பாதிப்புக்குள்ளானமை பற்றியும் அமைச்சருக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த - வைத்திய பீடத்துக்கு தெரிவாக இருந்த 950 மாணவர்களின் தொகை ஆயிரத்து 149 ஆக உயர்கிறது.

புதிய வெட்டுப்புள்ளியின்படி - அதாவது 199 மாணவர்கள் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அதேபோன்று ஆயிரத்து 60 பொறியியல் பீடமாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருந்தனர். புதிய முறையின்படி ஆயிரத்து 184 மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கு தெரிவாக உள்ளனர். அதாவது 124 பேர் மேலதிகமாக தெரிவுசெய்ய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இந்த உயர்வின் போது கணிசமான தமிழ் மொழிமூல மாணவர்கள் தெரிவாக வாய்ப்பு உள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த முறை யாழ். மாவட்டத்தில் 18 பேர் திறமை அடிப்படையிலும், 33 பேர் மாவட்ட அடிப்படையிலும், தெரிவாகியிருக்க வேண்டும். ஆனால், 41 பேரே அனுமதி பெற்றுள்ளனர், மிகுதி 10 மாணவர்களான நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். இது நிவர்த்தி செய்யப்படவேண்டும் என கல்வி அமைச்சரிடம் தெரிவித்திருந்தனர்.

இதற்கு வெட்டுப்புள்ளியில் நியாயம் கிடைக்கும். அதுவரை பொறுத்திருங்கள் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மீள்குடியேற்ற கொடுப்பனவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு —

வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கில் மீளக்குடியேறும் மக்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இனிவரும் காலங்களில் 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் மக்கள் தமது மீள்குடியேற்றத்தின்போது தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே இந்தக் கொடுப்பனவு அதிகரிப்பு இடம்பெறவுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் மீளக்குடியமர்ந்த மக்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, அரசாங்கம் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் 2 லட்சத்து 40 ஆயிரம் வீடுகள் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஜனாதிபதி நிதி, உலகவங்கி, ஐரோப்பிய யூனியன் மற்றும் பல சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மற்றொரு வீட்டுத்திட்டத்தை அமைக்கவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டத்தில் பொதுமக்களின் பிரதிநிதிகளையும் இணைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் மற்றும் நீர்ப்பாசனம் உட்பட பல திட்டங்களை அமுல்படுத்தவும் தீர்மானிக்கப் பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, றிசாத் பதியுதீன், ஹுசைன் பைலா, சேகு இஸ்ஸதீன், டி.எம்.தஸநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர, வட - கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜேவிக்கிரம, ஜனாதிபதி ஆலோசகர் நசீர் அகமட் மற்றும் தேச மீள்கட்டுமான மற்றும் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சுற்றறிக்கைக்கு எதிராக ஆசிரியர்கள் ஏப்ரல் 6 இல் சுகவீன லீவுப் போராட்டம்

கொழும்பு —

2006 - 01 ஆம் இலக்க சுற்றறிக்கையில் ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை என்பதைக் கண்டித்து இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் எதிர்வரும் 6 ஆம் திகதி இசுறுபாயவில் கல்வி அமைச்சுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த சுற்றிக்கையின் மூலமாக ஆசிரியர்கள் பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து கல்வி அமைச்சருக்கும் அமைச்சின் அதிகாரிகளுக்கும் பல முறை எடுத்துரைக்கப்பட்டது.

எனினும் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அத்துடன், கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

அதேபோன்று 2005 - 04 ஆம் இலக்க சுற்றிக்கையையும் இதுவரை அமுல்படுத்தவில்லை. கடந்த 3 வருடங்களாக ஆசிரியர் பயிற்சி பெற்ற 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்தே இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி சுகவீன விடுமுறை எதிர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

# வடக்கின் பெரும்போர் போட்டியில் பரியோவான் கல்லூரிக்கு வெற்றி





யாழ்ப்பாணம் —

வடக்கின் பெரும்போர் கிரிக்கெட் போட்டியின் ஒரு அங்கமாக யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி மழையின் குறுக்கீடு காரணமாக பரபோலர் முறையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி சா;;பாக ஆரம்ப துடுப்பாட்ட வீ;ர்களாக நவநீத் - சுதர்சன் ஜோடி களமிறங்கியது.

எனினும், ஸ்கோர் 2 ஆக இருந்த போது ஓட்டமெதையும் பெறாமல் நவநீத் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பிரகாஸ் பேசன் களமிறங்கினார். அவர் 7 ஓட்டங்களைப் பெற்று கஜறூபன் வீசிய பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய செல்ரன் 28 ஓட்டங்களைப் பெற்று சகிந்தன் வீசிய பந்தை நிரூபனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ஏபிரகாம் பிரசாத் களமிறங்கினார். அப்போது 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த சுதர்சன், நிரூபன் வீசிய பந்தை நேசவர்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய மகீபன் ஓட்டமெதையும பெறாமல் நவகீதன் வீசிய பந்தை நேசவர்மனிடம் பிடிகொடுத்தும், டயான் 2 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாகியும், டிலான் 20 ஓட்டங்களைப் பெற்று அக்சயன் வீசிய பந்தில் போல்டாகியும் வெளியேறினர்.

அடுத்து வியாசன் களமிறங்க, சிறப்பாக ஆடிய பிரசாத் 51 ஓட்டங்களைப் பெற்று சகிந்தன் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியாக இணைந்த ஜோன்சன் - மதிப்பிரியன் ஜோடியில் - ஜோன்சன் 5 ஓட்டங்களுடன் அக்சயனின் பந்தில் ஆட்டமிழக்க, மத்திய கல்லூரி அணி 47.1 ஓவர்களில் 203 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மதிப்பிரியன் ஓட்டமெதையும் பெறாமல் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் நிரூபன், அக்சயன், சகிந்த;ன் ஆகியோர் தலா 2, நவகீதன், கஜறூபன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 204 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பரியோவான் [illegible] அணியின் கிரிஷாந்தும், நேசவர்மனும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் கிரிசாந் 3 ஓட்டங்களைப் பெற்று வியாசன் வீசிய பந்தை ஜோன்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சகிந்தன் களமிறங்க, 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நேசவர்மன், மதிப்பிரியன் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில், சகிந்தனுடன், ஹரிபிரவீன் இணைந்து கொண்டார். இதில் சகிந்தன் 24 ஓட்டங்களைப் பெற்று சுதர்சன் வீசிய பந்தை செல்ரனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய நவகீதன் ஓரேயொரு ஓட்டத்தை மட்டும் பெற்று மதிப்பிரியன் வீசிய பந்தில் போல்டானார்.

தொடர்ந்து நிரூபன் களமிறங்கி, ஹரிபிரவீனுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். ஆனால், ஹரிபிரவீன் 28 ஓட்டங்களைப் பெற்று சுதர்சன் வீசிய பந்தில் போல்டானார்.

அவரையடுத்து சஞ்சீவன், நிரூபனுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் ஆடியவேளை, மழை குறுக்கிட்டதால் ஆட்டத்தைத் தொடரமுடியாத நிலை தோன்றியது.

அப்போது பரியோவான் கல்லூரி அணி 29.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

எனவே, பரபோலர் விதியின்படி யாழ்.பரியோவான் கல்லூரி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நிரூபன் 38, சஞ்சீவன் 18 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் சுதர்சன், மதிப்பிரியன் இருவரும் தலா 2, வியாசன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

விளையாட்டு

# 2ஆவது டெஸ்டிலும் அவுஸ்ரேலியா வெற்றி



டேர்பன் —

தென்னாபிரிக்க - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே டேர்பனில் நடைபெற்று முடிந்த 2 ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி - 112 ஓட்டங்களால் வெற்றிபெற்று, தொடரைக் கைப்பற்றியது.

410 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 4 ஆம் நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

5 ஆம் நாளான நேற்று டி - வில்லியர்ஸ் 17, சிமித் 10 ஓட்டங்களுடன் ஆட்டத்தைத் தொடங்கினர். இவர்கள் இருவரும் அணிக்காக ஆரம்ப அடித்தளத்தை சிறப்பாக அமைத்தனர். இந்த நிலையில் அணி 91 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் டி - வில்லியர்ஸ் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து கிப்ஸ் களமிறங்கிய போதிலும், 40 ஓட்டங்களுடன் இருந்த சிமித் - அணி 98 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டமிழந்தார். ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் ஷேன்வோன் வெளியேற்றினார்.

இதனையடுத்து, கிப்ஸுடன், கலிஸ் இணைந்தார். இந்த நிலையில் தென்னாபிரிக்க அணி - 122 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது. இதல் கலிஸ் 7, கிப்ஸ் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்து பிறின்ஸ், ருடோல்ப் ஜோடி அணியின் சரிவை தடுத்து நிறுத்த முயற்சித்தபோதிலும் பிறின்ஸ் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் பவுச்சர் இணைந்து கொண்டார். இவர்கள் இருவரும் பொறுப்புடன் விளையாடி அணியின் ஸ்கோரை அதிகரித்தவேளை - ருடோல்ப்பின் விக்கெட் வீழ்த்தப் பட்டது. இவர் 36 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து பொலக் இணைந்தார். எனினும் அவர் 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதன்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 181 ஆக இருந்தது. இதன் பின் நிக்கி போஜே இணைந்துகொண்டார். இவர்கள் இருவரும் அணியின் ஓட்ட




எண்ணிக்கையை அதிகரித்தவேளை - 48 ஓட்டங்களைப் பெற்றிருந்த போஜே ஆட்டமிழந்தார்.

இதன் பின் வந்த நெல் 14, என்ரினி 0 ஆகிய ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால், தென்னாபிரிக்க அணி - அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 297 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால், அந்த அணி 112 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் பவுச்சர் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்து வீச்சில் ஷேன்வோன் 6, கிளார்க் 2, லீ மற்றும் கஸ்பரோவிச் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றியை நோக்கி இலங்கை



கொழும்பு —

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கொழும்பு - எஸ்.எஸ்.சி. அரங்கில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்டின் நான்காம் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 448 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையை எட்டியது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 2 விக்கெட் இழப்புக்கு 242 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் சங்ககார 79, ஜெயவர்த்தன 69 ஓட்டங்களுடன் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்த நிலையில் ஸ்கோர் 285 ஐ எட்டியபோது சிறப்பாக ஆட்டத்தைத் தொடர்ந்த ஜெயவர்த்தன - மொகமட் அசிப் வீசிய பந்தை அப்துல் ரசாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். 139 பந்துகளில் 12 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 82 ஓட்டங்களை ஜெயவர்த்தன பெற்றிருந்தார்.

இதையடுத்து சமரவீர களமிறங்கினார். ஏற்கனவே களத்திலிருந்த சங்ககார - சமரவீர ஜோடி தங்களது இணைப்பாட்டத்தின்மூலம் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களைத் திணறடித்தனர். இருவரும் நிதானமாகவும், பொறுமையாகவும் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களை எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்தனர். இதில் சங்ககார வேகமாகச் சதத்தைக் கடந்தார்.

இந்த நிலையில் ஸ்கோர் 429 ஐ எட்டியபோது இரட்டைச் சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட சங்ககார ஆட்டமிழந்தார்.

326 பந்துகளில் 22 பவுண்டரிகள் அடங்கலாக 185 ஓட்டங்களைக் குவித்த சங்ககார, சொஹைறக் மலிக்கின் பந்தை இன்சமாம் உல் ஹக்கிடம் பிடிகொடுத்த ஆட்டமிழந்தார்.

அடுத்து டில்சான் களமிறங்கினார். எனினும், ஸ்கோர் 438 ஐ எட்டிய போது, 119 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த சமரவீர, அப்ரிடியின் பந்தை இம்ரான் பர்ஹறத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் மஃரூப் களமிறங்கினார். எனினும், இலங்கை அணி ஸ்கோர் 448 ஐ எட்டியபோது டிக்ளேர் செய்தது. டில்ஷான் 8, மஃரூப் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மொகமட் அசிப் 2, கனேரியா, சொஹைறப் மலிக், அப்ரிடி ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 458 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு களமிறங்கிய பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 89 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இம்ரான் பர்ஹறத் 34 ஓட்டங்களுடனும் யுனிஸ்கான் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். சொகைப் மலிக் 30, பைசல் இக்பால் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.



போட்டியின் இறுதிநாள் இன்றாகும். இன்றைய ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி இலக்கை எட்டுமா? அல்லது இலங்கை பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தி இலங்கையை வெற்றிபெறச் செய்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# இங்கிலாந்து செல்லும் இலங்கை அணி 25 பேரின் விபரங்கள் அறிவிப்பு

கொழும்பு —

இங்கிலாந்துக்கு ஏழுவாரகால சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ள இலங்கை அணியைத் தெரிவு செய்வதற்காக - 25 பேர் கொண்ட வீரர்களின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த 25 பேரில் பந்து வீச்சாளர் நுவான் சொய்சா, சகலதுறை வீரரான கயன் விஜயகோன் (29வயது) ஆகியோரின் பெயர்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

அடுத்த மாதம் 20 ஆம் திகதி இலங்கை அணி இலங்கிலாந்துக்கு செல்லவுள்ளது. டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி என இரண்டு பிரிவுகளாகவே வீரர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

25 பேரின் விபரம் வமாறு, -

மாவன் அத்தபத்து, மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககார, முரளிதரன், சனத் ஜெயசூர்யா, உபுல் தரங்க, ஜெகான் முபாரக், இயன் டானியல், டில்ஷான், திலான் சமரவீர, சாமர கப்புகெதர, ரஸல் ஆர்னல்ட், பிரசன்ன ஜெயவர்த்தன, பர்வேஷ் மஃறூப், சமிந்தவாஸ், லசித்மலிங்க, டில்ஹார பெர்னாண்டோ, நுவான் குலசேகர, ருச்சிதபெரேரா, அகலங்க கணேகம, தம்மிக பிரசாத், நுவான் சொய்சா, மலிங்க பண்டார, கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி கயான் விஜயகோன்.

# சுனாமி பாதித்த சுப்பர்மடம், கொட்டடி மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள்







யாழ்ப்பாணம் ———

சுனாமியால் பாதிக்கப்பட்ட சுப்பர் மடம், கொட்டடி கிராம மக்களுக்கு 10 வீடுகள், 14 கண்ணாடி இழைப்படகுகள் வெளியிணைப்பு இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், வலைத்தொகுதிகள் என்பன வழங்கப்பட்டன.

இந்த சுயதொழில் வாழ்வாதார உதவு பொருட்களை சேவாலங்கா நிறுவனமும், ஜேர்மன் அக்கிறோ நிறுவனமும் இணைந்து வழங்கின.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் - யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளிடம் பொருட்களைக் கையளித்தார்.

ஜே - 401 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கொட்டடி கிராம மக்களுக்கு 10 வீடுகளும், சுப்பர்மடம் கிராம கடற் தொழிலாளர்களுக்கு 14 கண்ணாடி இழைப்படகுகளுடன் வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைத்தொகுதிகள் மற்றும் 6 தையல் இயந்திரங்கள் என்பன வழங்கப்பட்டன.

இவற்றுடன் பெண்களைக் குடும்பத்தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்களும், கோழிகளும் வழங்கப்பட்டன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பகுதி மக்களுக்கு பல்வேறு உதவிகளை செயற்படுத்தி வரும் சேவாலங்கா நிறுவனம் - பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 40 வீடுகளை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான செயலகத்தை சேர்ந்த இ.சந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், ஜேர்மன் அக்கிறோ அக்சன் நிறுவன பொறியியலாளர் எச்.தோமஸ், நிறுவனத்தின் மாகாண, மாவட்ட களப் பணிப்பாளர்களான த.தமிழழகன் வி.கேசவன், தே.தேவராஜன் ஆகியோர் கலந்து கொண்டதாக நிறுவன திட்ட முகாமையாளர் க.உஜிதன் தெரிவித்தார். (91)

# படையினரின் கெடுபிடிகள் குடாநாட்டில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம் ———

யாழ். மாவட்டத்தில் மீண்டும் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது. பெரும்பாலான வீதிகளில் அடிக்கொருமுறை காணப்படும் இவர்களால் பயணிகள் உட்பட மக்கள் பெரும் அலைக்கழிவுக்கு ஆளாகின்றனர்.

குறிப்பாக மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில் செல்வோர் மறிக்கப்பட்டு, வாகனங்களின் சில பாகங்கள் கழற்றிப் பார்க்கப்படுவதோடு ஆள் அடையாள அட்டை, வாகன ஆவணங்கள் என்பவற்றையும் பார்வையிடுகின்றனர்.

கடந்த 15ஆம் திகதி முதல், போக்குவரத்து பொலிஸார் வாகன சோதனைகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ள நிலையிலேயே - படையினர் ஏன் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் ஆவணங்களை சோதனையிடுகின்றனர் என மக்கள் வினா எழுப்புகின்றனர். (110)

## வடிவேலர் மணிமண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம் ———

அல்லையம்பதி, துன்னாலையில் அமைக்கப்பட்ட வடிவேலர் மணிமண்டபத் திறப்புவிழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புரைகளை ஆறு.திருமுருகன், சின்னமணி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து மதியபோசனம் நடைபெற்று, கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

# நிர்வாக அலுவலர் ஓய்வுபெறுகிறார்

மட்டுவில் ———

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இதுவரை காலம் நிர்வாக அலுவலராகக் கடமையாற்றிய சண்முகம் வீரசிங்கம் கடந்த வாரம் ஓய்வு பெற்றுள்ளார். பொது எழுதுநர் அதிசிறப்புத் தரத்தைச் சேர்ந்த இவர் மும்மொழிப் புலமையுடைய நிர்வாக அதிகாரியாவார்.

2005 ஜனவரி மாதம் தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்ற இவர் கடந்த ஒரு வருடமாக மீள் நியமனம் பெற்று கடமையாற்றினார். 60 வயது கடந்தவர்களுக்கு மீள் நியமனம் வழங்குவது இல்லை என்ற அரசின் நிலைப்பாட்டையடுத்தே இவருக்கு இரண்டாவது தடவையாக மீள் நியமனம் வழங்கப்படவில்லை. இவரது வெற்றிடத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (24)

# மீண்டும் அதிகரித்துவரும் கோழி இறைச்சி பாவனை

யாழ்ப்பாணம் ———

அண்மைக்காலங்களில் பறவைக் காய்ச்சல் பீதி காரணமாக யாழ். மாவட்டத்தில் பறவையின இறைச்சி மற்றும் முட்டைகளின் பாவனை பெரு வீழ்ச்சி கண்டது. இதனால் குறித்த வியாபாரிகளின் வருமானமும் பாதிப்படைந்தது.

தற்போது இந்தப் பறவைக்காய்ச்சல் பீதி குறைந்து வருவதால் திருநெல்வேலி, கல்வியங்காடு சந்தைப் பகுதி உட்பட கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றின் விற்பனை அதிகரித்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். (110)

# இலங்கை இலக்கியப் பேரவை பரிசுக்கு நூல்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணம் ———

இலங்கை இலக்கியப் பேரவையின் 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளுக்குரிய பரிசுகளுக்காக நூல்களை அனுப்பி வைக்க விரும்புவோர் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் கலாநிதி க.குணராசா, தலைவர், இலங்கை இலக்கியப்பேரவை, 75/10A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

2003 ஜனவரியிலிருந்து 2004 டிசம்பர் வரை இலங்கை எழுத்தாளர்களால் இலங்கையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இலக்கிய ஆய்வு, நாவல், சிறுகதை, கவிதை, காவியம், சிறுவர் இலக்கியம், சமயம், நாடகம், அறிவியல், பல்துறை என பரிசுக்குரிய நூல்கள் தெரிவு செய்யப்படவுள்ளது. பாடநூல்கள் இந்த வரிசையில் அடங்காது.


இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசுத் தேர்வுக்காக ஏற்கனவே தம் நூல்களை அனுப்பி வைத்தவர்கள் புதிதாக அனுப்பத் தேவையில்லை.

பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படாத நூல்கள் இலக்கியப் பேரவை நூலகத்தால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்படாதிருந்தால், அதற்கான பெறுமதி 15 சதவீதக் கழிவின் பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

நூலகத்தால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் நடுவர்களின் தேர்வில் சிறிது கசங்கிய நிலையில் அந்த நூல் திருப்பி அனுப்பி வைக்கப்படும். கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த இலக்கியப் பேரவை விழாவில் 1977 - 2002 ஆம் ஆண்டு வரையான 47 நூல்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இலங்கையின் பல பாகத்து படைப்பாளிகளும் இந்த விழாவில் கலந்து சிறப்பித்திருந்தனர். இலங்கை இலக்கியப் பேரவை விழாவின் போது 'கனக செந்தி கதாவிருது' பெற்ற படைப்பாளிகளும் கௌரவிக்கப்படுவர்.

## தவக்கால நற்சிந்தனை



கைவிடப்பட்ட விதவை ஒரு நடுவனிடம் நீதி வழங்கக் கோரினாள். அந்த நடுவனோ கடவுளையும், மனிதரையும் மதியாதவன். தர்மத்துக்கும் அஞ்சாதவன். இருப்பினும் இந்தக் கைம்பெண்ணின் நச்சரிப்புத் தாங்காமல் நீதி வழங்க முற்பட்டான். இது இடைவிடா செபத்தின் பலனை யேசு நமக்கும் கற்பிக்கிறார். தனது மக்கள் துன்பத்தின்போது கூப்பிடும்போது இறைவன் அவர்களுக்கு நீதி வழங்கக் காலம் தாழ்த்துவதில்லை. செவி கொடாமல் இருக்கமாட்டார். இதன் பொருள் விடாது விண்ணப்பிக்கவேண்டுமென்பது மட்டுமல்ல, இறைவன் மட்டில் அசைக்க முடியாத நம்பிக்கையும், பற்றுறுதியும் கொள்ளவேண்டும் என்பதுதான்.

இடைவிடாது விண்ணப்பம் செய்கின்றபோது உடனே கிடைக்காத நேரத்தில் எளிதில் நாம் தளர்ச்சி அடைகிறோம். செபிப்பதையும் நிறுத்தி விடுகிறோம். பற்றுறுதியையும் கைவிட்டு விடுகிறோம். எனவேதான் தளர்ச்சியில்லாத நம்பிக்கை நமக்கு வேண்டுமென்கிறார் யேசு. தொல்லைதரும், தொந்தரவு தரும் சோதனைகளும், வேதனைகளும் நிறைந்த இக்காலத்தில் கடைசிவரை நம்பிக்கையில் நிலைத்திருப்போம். அனைத்துக்கும் விடிவும், முடிவும், சமாதானமும் வந்தே தீரும் என்று உறுதியுடன் செபிப்போம்.

*மோ.தார்சீசியஸ்*


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : ந.சுகிர்தன்
முகவரி : புங்குடுதீவு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி : ----------
பிறந்த ஆண்டு : ----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

## உளவள பயிற்சிப் பட்டறை

மல்லாகம் ———

சமூக சேவைகள் சமூக நலன் சேவை அமைச்சின் அனுசரணையுடன் இயங்கும் உளவள துணை நிலையத்தால் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் திருமணத்துக்கு முன்னான உளவள பயிற்சிப் பட்டறை ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் வலி. வடக்கு பிரதேசத்தில் வசிக்கும் திருமணமாகாதவர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு வலி. வடக்கு பிரதேச உளவளத் துணை அலுவலர் உதயகுமார் கேட்டுள்ளார். (68)

## குடாநாட்டில் வெப்ப நோய்கள் தீவிரம்

யாழ்ப்பாணம் ———

தற்போது யாழ். மாவட்டத்தில் காணப்படும் கடும் வெப்பமான காலநிலையால் மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை வெப்பத்தின் கொடூரத்தால் பலர் பாதிப்படைந்துள்ளனர்.

காய்ச்சல், தலையிடி, கண் எரிவு உட்பட பலதரப்பட்ட நோய்களுக்கு ஆளாகியுள்ள இவர்கள், தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர். (110)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் ———

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதரி பீட மன்றுளாடும் விநாயகப் பெருமான், ஸ்ரீ பழனி ஆண்டவர் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை 6.16 மணியளவில் பாலஸ்தாபனக் கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

நாளை காலை 7.12 மணி முதல் 8.12 மணிவரையான சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

## சமுர்த்தி கொடுப்பனவு

மட்டுவில் ———

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் 2005 ஜூலை மாதம் முதல் டிசம்பர் வரையான ஆறு மாதங்களுக்குரிய சமுர்த்தி பணமுத்திரைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

600, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கான கொடுப்பனவுகள் சாவகச்சேரி, கைதடி, வரணி, கொடிகாமம் பிரிவு சமுர்த்தி வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும், உரியவர்களை பெற்றுக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (24)

## அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம் ———

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தில் அமைக்கப்படவுள்ள மாதாஜி லிங்கேஸ்வர ஆலய கட்டட அடிக்கல் நாட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி 10 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

## குருபூஜை ஆராதனை விழா

யாழ்ப்பாணம் ———

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் 25 ஆவது ஆண்டு குரு பூஜை ஆராதனை விழா எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காலை 10 மணி முதல் 12 மணி வரை விசேட பூஜைகள் நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வர பூஜை இடம் பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் நிகழ்ச்சித் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும். தொடர்ந்து பண்ணிசைக் கச்சேரி, இன்னிசைக் கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளன.

# தொழில் மலர்

# மிளகாய்ப் பயிர்ச்செய்கை

நமது நாட்டில் மிளகாய் ஒரு பணப்பயிராகப் பயிரிடப்பட்டுவருவதுடன் இது எமது நாளாந்த உணவின் பகுதிப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சராசரியாக ஒரு வருடைய வருடாந்த செத்தல் மிளகாயின் பாவனை 2.32 கிலோவாகும். 2001 ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்த உற்பத்தி செய்யப்பட்ட செத்தல் மிளகாயின் அளவு 15 ஆயிரம் மெற்றிக்தொன். இறக்குமதி செய்யப்பட்ட அளவு 20 ஆயிரம் மெற்றிக்தொன். இதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 750 மில்லியன் ரூபா.

இந்தப் பயிர்ச்செய்கையானது - 20 ஆயிரம் ஹெக்டேயருக்குப் பரம்பியுள்ளது. ஆரம்ப காலங்களில் தமிழர் தாயகப் பகுதிக்கு இது அதிக வருமானம் ஈட்டியுள்ளது. தமிழர் மீதான பொருளாதாரத் தடை, பயிர்ச்செய்கை நிலங்கள் இராணுவத்தால் அபகரிப்பு ஆகிய காரணங்களால், நமது பிரதேசத்தின் மிளகாய்ப் பயிர்ச்செய்கையும் அதனது நுட்பமும் வீழ்ச்சியடைந்தது. இந்தப் பயிர்ச்செய்கையின் 2/3 பகுதி பெரும் போகத்துக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

விவசாய திணைக்களத்தினால் 5 வகையான இனங்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. அவையாவன MI-I, MI-II, KA-2 அருனலு (Arunalu), MI-HOT. இவை உச்சப் பயனைக் கொடுக்கக் கூடிய இனங்களாகும் (2.5-3தொன்/ஹெக்டேயர்). ஆனால், எமது பிரதேசத்தில் சராசரி விளைச்சல் 0.75-1 தொன்/ ஹெக்டேயர்) பீடைகளினதும், நோய்களினதும் தாக்கம், அதியுயர் ஈரப்பதன் தாக்கம் எமது பிரதேசத்தில் இலைச் சுருட்டல் ஆனது, விளைச்சல் குறைவுக்கு ஓர் காரணமாக அமைகிறது. அத்துடன், ஒழுங்கற்ற நீர் விநியோகமும் விளைச்சலின் குறைவை ஏற்படுத்துகிறது.

**மிளகாய்ப் பயிர்ச்செய்கையின் முகாமைத் துவம்**

**நாற்றுமேடைப் பராமரிப்பு**

1 மீற்றர் × 3 மீற்றர் அளவுடைய 25-30 எண்ணிக்கையான நாற்று மேடையானது ஒரு ஹெக்டேயருக்குத் தேவையான நாற்றை உருவாக்க முடியும். 1 கிலோகிராம் நல்லின மிளகாய் விதைகளானது ஒரு ஹெக்டேயருக்குப் போதுமானதாகும். நாற்று மேடையானது மிகச் சிறந்த நீர்வடிதிறனுடையதாக இருத்தல் வேண்டும். நாற்று மேடையைத் தொற்று நீக்குதல் மிக அவசியமாகும். இதற்கு மேடையில் எரிப்பதன் மூலமும் அல்லது சூரியமயமாக்கல் (Solarization) இரசாயனப் பயன்பாடு (பீடை, நுண்ணுயிர் நாசினிகள்) ஆகிய முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உக்கிய சேதனப் பசளையானது - நாற்று மேடையில் சேர்க்கப்பட்ட பின்னர், பங்கசு நாசினியால் (Capton-80%) பரிகரித்த விதைகள் நேராக 1 சென்ரிமீற்றர் ஆழத்தில் விதைக்கப்படல் வேண்டும். விதைகள் முளைக்கும் வரை ஒவ்வொரு நாளும் காலை நீர்ப் பரிகாரம் ஆனது அவசியமானதாகும். பச்சை இலைகளை நாற்று மேடையில் பரவுவதன் மூலம் நோய்த் தாக்கத்தைக் குறைக்கவும், ஈரப்பதனை மேடையில் பேணவும் முடியும். (Mulching) விதைகள் முளைத்த பின், பங்கசு நாசினிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வாடல், வேர் அழுகல் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.

களைகள் நாற்று மேடையில் முளைத்தால், அவற்றை அகற்றுதல் வேண்டும். நாற்று நடுகைக்கு 35 நாட்கள் வயதுடைய நாற்றுகள் பயன்படுத்தப்படல் அவசியமாகும். நாற்றுகளை மேடையிலிருந்து பிடுங்குவதற்கு 7 நாட்களுக்கு முன் கட்டப்பட்டநீர் விநியோகம் அவசியமாக அமைகிறது.

**நடுகையும், அதன் பராமரிப்பும்**

சிறந்த நீர் வடிதிறனுடைய வளமான இருவாட்டி மண் இதற்குப் பொருத்தமான நிலமாகும். 45 சென்ரிமீற்றர் மேல் ஆழத்துக்கு உழுது பண்படுத்தப்பட்ட பின் உருவாக்கப்பட்ட சால் பாத்திகளில் நாற்றுக்களை நடுதல் வேண் டும்.



நாற்றுக்களுக்கிடையிலான இடைவெளி 45×30 சென்ரிமீற்றர் (மழைகாலத்தில்) (74,000 தாவரம்/ஹெக்டேயர்) 60×45 சென்ரிமீற்றர் நீர்ப்பாசன நிலங்களில் இருத்தல் அவசியமானது.

**பசளைப் பாவனை**

மிகவும் நன்கு உக்கிய கூட்டெருவை (சேதன உரம்) 12 தொன் நிலம் பண்படுத்தும் போது சேர்த்து மண்ணுடன் கலத்தல். நாற்று நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்பு அடிக்கூட்டுப் பசளையாக மும்பை சுப்பர் பொசுபேற் (TSP) 100 kg/ha, மியூறியேற்றுப் பொட்டாசு (Mop) 50kg/ha ஆகியவற்றை நடுகைக்குழிகளில் இட்டு மண்ணுடன் கலந்து விடுதல்.

1 ஆம் மேற்கட்டுப் பசளையாக 65கிலோகிராம் யூரியாவை இரண்டு வாரங்களின் பின் தாவரத்தின் ஒரு பக்கத்தில் இருந்து 15 சென்ரி மீற்றர் தூரத்தில் இடல்வேண்டும். மழை காலங்களில் இதனுடன் சேர்த்து 50Kg mop இடல், 2ஆம் மேற்கட்டுப் பசளையாக 85 கிலோகிராம்/ஹெக்டேயர் யூரியாவை மறுபக்கத்தில் இடல் வேண்டும். ஆனால், மழைகாலங்களில் 65 கிலோகிராம்/ஹெக்டேயர் யூரியா போதுமானதாகும். இது தாவரம் நட்டு 4 ஆம் வாரத்தில் இருத்தல் அவ சியமான தாகும். 3 ஆம் மேற்கட்டுப் பசளையாக 85கிலோ கிராம்/ஹெக்டேயர் யூரியாவையும், 50 கிலோ கிராம்/ஹெக்டேயர் mop தாவரங்களுக்கிடையில் மண்ணுடன் கலந்து விடுதல். இது தாவரம் நட்டு 8 ஆம் வாரத்தில் அவசியமானதாகும்.

ஆனால், மழை காலத்தில் 65 கிலோ கிராம்/ஹெக்டேயர் யூரியா மட்டும் போதுமானதாகும். 4 ஆம் மேற்கட்டுப் பசளையாக 85 கிலோகிராம்/ஹெக்டேயர் யூரியாவை தாவரங்களுக்கிடையே மண்ணுடன் கலந்து விடுதல். இது நட்டு 12 ஆம் வாரத்தில் செய்யப்படுதல் அவசியமானதாகும். ஆனால், மழை காலத்தில் 65 கிலோகிராம்/ஹெக்டேயர் யூரியா போதுமானது.

விசேடமாக, பசளைகளை மண்ணுடன் கலந்துவிடும்போது பயிரின் வேர்களுக்கு சேதம் ஏற்படாதவாறு இருத்தல் வேண்டும்.

(தொடரும்...)

# பயிர்ச் செய்கையில் மண்ணின் பங்கு

பயிரின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஐந்து - மண், நீர், சூரிய ஒளி, வெப்பம், வாயு. இவற்றுள் மண் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

சூரிய வெப்பம், கடும் பனி, மழை, காற்று, தாவர வேர்கள் யாவும் கற்பாறைகளைத் தகர்த்து மண்ணை உண்டாக்குகின்றன. நீராலும், காற்றாலும் மண் எடுத்துச் செல்லப்பட்டு படைபடையாகவும் குவியலாகவும் போடப்பட்டு பூமி அதிர்ச்சியாலும், வெப்பத்தாலும் தாக்கப்பட்டு- மணல், களிமண், செம்மண், உவர்மண் என வெவ்வேறு குணங்களைப் பெற்றுக்கொள்கிறது.

பொதுவாக மண்ணைக் களிமண், மணல், இருவாட்டி மண் என மூன்று



பெரும் பிரிவுகளாகப் பிரிக்க முடியும். களிமண் மிகவும் சிறிய பொடிகளால் உருவாக்கப்பட்டிருக்கும். நீரில் மிக மென்மையாகவும், வெப்பத்தில் மிகவும் கடினமாகவுமிருக்கும். நீரை வெளியேவிடாது தடைசெய்து தேங்கி நிற்கச்செய்யும். பயிர் வேர்களைப் படர விடாது. நீர் காற்றோட்டத்தைக் குறைக்கும்.

மணல் பெரும் பொடிகளால் உண்டாக்கப்பட்டிருக்கும். நீராலும், வெப்பத்தாலும் பெருமளவு மாறுதல் அடைந்து நீரை விரைவில் உறிஞ்சி எடுத்து அப்புறப்படுத்தும். நீருக்குத்தடையாயிராது. பயிர் வேர்கள் படர இடம் கொடுக்கும். பெரும்பாலும் மேற்கண்ட காரணங்களால் பயிர்ச்சத்து கழுவப்பட்டு, குறைபாடுடையதாக இருக்கும்.

இருவாட்டி மண்களியும், மணலும் கலந்த மண். சரி சமன் கலவை காண்பது அரிது. ஆனால், கலப்பால் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாய் இருக்கும். இயற்கையில் கலப்பு இல்லாவிட்டால் செயற்கையால் உண்டாக்கிக் கொள்ளலாம். மண்ணிலுள்ள உயிர்சத்துக்கள் நீரில் கரைந்து, வேரின் மூலமாய் மரத்தின் பல பாகங்களுக்கும் போகின்றன. வேரிலுள்ள மிக மென்மையான மயிரிழைகள் இந்தச் சத்துக்களை நுகர்ந்தெடுக்கின்றன. இவற்றின் வளர்ச்சிக்கு வெப்பமும், வாயுவும் அவசியம். இதைவிடப் பல நுண்உயிர்கள் பயிர் வளர்ச்சிக்கு உறுதுணை என்பது நவீன விஞ்ஞான முடிவு. இவற்றின் வளர்ச்சிக்கும் வெப்பம், வாயு, பசளை அவசியம்.

பயிர்களின் வளர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் யாவையும் ஒருங்கே சேர்த்துக் கொடுக்கக்கூடிய மண், பசளையுள்ள இருவாட்டி மண், இயற்கையாகக் கிடைக்காத பட்சத்தில் இதைச் செய்கையில் அமைத்துக்கொள்ளலாம். இதைத் திறம்படச்செய்வதே உழவனின் நுண்கலை, இலை, குழை, கழிவுப் பொருட்களும், கால் நடை மலசலங்களும், சாம்பல், உலோகச்சத்துக்களும் கலந்து இத்துப்போன நிலையில் பயிர்களுக்கு மிகவும் நல்ல உணவாகின்றன. இவை கலக்கப்பட்ட மண், நீர் எடுத்து வைத்திருக்கவும், வாயு ஊடுருவிச் செல்லவும் ஏற்ற தன்மையை உடையது. ஆகையால் பசளையிட்டுப் பண்படுத்தப்பட்ட மண் - தாவர விருத்திக்குப் பெரும் துணை.

தோட்டச் செய்கையில் மேல் மண் கீழ் மண் என்ற பிரிவும் உண்டு. பெரும்பாலும் முதல் 2 அடி - அடிமண், மேல் மண் எனவும் அதன்கீழ் இருப்பது கீழ்மண் எனவும் கொள்ளப்படுகிறது. இந்த இரண்டு பாகங்களின் தன்மையும் தாவர வளர்ச்சிக்கு ஏற்றதாயிருக்க வேண்டும். கீழ் மண் களியாய், கல்லாய் இருந்தால் நீர்த் தேங்கி நின்று பயிரின் வெர்களைப் பாதிக்கக்கூடும். கீழ் மண் மணலாயிருந்தால், நீர் விரைந்தோடி வேர்காய்ந்து போகவும் கூடும். ஆனபடியால் கீழ் மண்ணை ஆராய்ந்து, அறிந்து ஏற்ற நீரோட்ட வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

பசளையை மண்ணுக்கு ஏற்றவாறும், பயிரின் வேர் அடர்த்திக்கு ஏற்றவாறும் நிலத்தில் கலக்கப்படல் வேண்டும். களிமண் நிலங்கள் மீண்டும் மீண்டும் கொத்தப்பட்டு கட்டிகள், கற்கள் யாவும் அகற்றப்பட்டுப் பதனிடப்படவேண்டும். விசேடமாக வேரின் சுற்றாடல் மிகவும் மென்மையாக இருக்கவேண்டும்.

சிறு பயிர்களின் வேர்கள் படர்ந்து சென்று செழிக்க ஏற்ற குணங்களை அமைக்க வேண்டும். பயிர்செய்யும் இடங்கள் சரிவில்லாமல் சமமாயிக்க வேண்டும். இன்றேல் நீர் வேகமாய் ஓடி பசளையைக் கழுவிக் கரைத்து அகற்றிவிடும். ஏற்ற வரம்புகளைக் கட்டிப் பரவிப் பண்படுத்த வேண்டும்.

மண்ணைப் பதன் செய்யும்முறை யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஓர் நுண்கலை. இதனாலேயே சிறு தோட்டங்களில் பெரும் விளைச்சல்கள் ஏற்படுகின்றன. இந்தக் கலையே பயிர்ச்செய்கையின் அடிப்படை நுட்பம். விவசாய நிலங்களைப் பண்படுத்தும் பணியில் ஈடுபடவேண்டும்.

# பாடசாலையும், பயிர் அரும்பொருளகமும்

பயிர்களின் அழிவிலிருந்து உலகைக் காப்பது எல்லோரதும் கடமையாகும். இந்தவகையில் பாடசாலையில் "பயிர் அரும் பொருளகம்" இந்தச் செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுக்கத் தேவைப்படும் ஒன்றாகும்.

"பாடசாலை ஒரு சமுதாயத்தின் மாதிரி"
- ஜோன் டூயீ.

பாடசாலையானது - சமூகவாழ்வின் பயிற்சிக்களமாகவும், மாணவர்களைச் சமூகவாழ்க்கைக்குத் தயார்படுத்தும் நிலையமாகவும் மிளிர வேண்டும்.



பாடசாலையில் ஆசிரியரின் நேரடி வழிப்படுத்தலின் கீழ் வகுப்பறைக்கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகிறது. இவற்றைவிட வகுப்பறைக்கு வெளியே விளையாட்டுத்திடல்கள், வணக்கத்திற்குரிய இடங்கள், கலைநிகழ்வுக்கூடங்கள், விவசாயப் பயிர்த்தோட்டங்கள் என்பவற்றிலும் ஆசிரியர் - மாணவர்களை முகாமை செய்து, வருங்கால சமூகத்தில் அவனை முதல்தரப் பிரஜையாக வருவதற்கான வழிகாட்டல்கள் சீராக மேற்கொள்ளப்படுகிறது.

இந்தவகைச் செயற்பாடுகளில் ஒன்றாக 'பயிர்அரும் பொருளகம்' பாட இணைவிதானச் செயற்பாடாக பாடசாலையில் நிறுவப்படுதல் இன்றியமையாததாகும். விஞ்ஞான ஆசிரியர், விவசாய ஆசிரியர், தொழில்நுட்பத்திறன் ஆசிரியர் போன்றோரின் ஒருமித்த செயற்பாட்டில் பயிர் அரும்பொருளகத்தை வடிவமைத்து பாடசாலையில் செயற்படுத்தப்படலாம்.

பாடசாலையில் பயிர் அரும் பொருளகம் என்பது பாடசாலையில் கிடைக்கும் நிலப் பரப்பில் பிரதேசத்தில் காணக்கிடைக்காத தாவரங்கள், விஞ்ஞான ரீதியில் முக்கியத்துவம் பெறும் விசேட தாவரங்கள், மருத்துவப்பயிர்கள் போன்றவற்றை நாட்டிப் பராமரித்தலாகும். இங்கு ஒவ்வொரு விசேட வகைக்கும் ஒரு தாவரத்தை மாத்திரம் நாட்டுதல் போதுமானது.

பயிர் அரும்பொருளகத் தைப் பாட சாலையில் அமைப்பதன் மூலம் மாணவர் பல்வேறு நன்மைகளை அடைவர்.

✷ இந்தத் தாவரங்களை நாட்டல், பராமரித்தல், பாதுகாத்தல் போன்ற விடயங்கள் மூலம் மாணவரிடையே பயிரியல் அறிவையும், சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வையும் வளர்க்கலாம்.

✷ பல்வேறு தாவரங்களின் விசேட பயன்களைப் பற்றி தம்மிடையே கலந்துரையாடல் மூலம் பல்வேறு தகவல்களைப் பரிமாறிக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

✷ இங்கு மருத்துவரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களை நாட்டிப் பராமரிப்பதன் மூலம் பக்கவிளைவற்ற சுதேச வைத்தியத்தைக் கைக்கொள்வதற்கு மாணவர்கள் தூண்டப்படுகின்றனர்.

✷ பல்வேறு மருத்துவப் பயிர்களையும் அவற்றின் பயன்களையும் அறியாததனாலேயே பலர் ஆயுர்வேதவைத்தியம், சித்த வைத்தியம் போன்றவற்றை நாடுவதில்லை. இங்கு இந்தப் பயிர்கள் மாணவர் மத்தியில் அறிமுகப் படுத்தப்படுவதன் மூலம் மாணவனையும், அவன் சார்ந்த சமூகத்தையும் ஆயுர்வேத சித்த வைத்தியத்தில் சிகிச்சை பெறத் தூண்டமுடிகிறது.

✷ எல்லாவற்றுக்கும் மேலாக அருகி வரும் தாவரங்களை அழிவிலிருந்து காத்து அடுத்த சந்ததிக்குக் கொடுக்கும் மனப்பாங்கு மாணவர் மத்தியில் வளர்சியடையவும் செய்யப்படுகிறது.

இன்றைய புதிய கல்விச்சீர்த்திருத்த சிந்தனைகளுக்கமைய ஏட்டுக்கல்வியின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு, செயன்முறை அனுபவம் மூலம் பெறும் கல்விக்கு முக்கியத்துவம் கூட்டப்பட்டுள்ளது. இந்த வகையில் பயிர் அரும்பொருளகமானது தனியாளின் திறன்களை விருத்தி செய்து அவற்றுக்கேற்ப சூழலைப் பயன்படுத்தி இயலுமானவற்றை அறிந்து கொள்ள அவனுக்கு உதவுவதோடு, சூழலில் பல்வேறு தாவரங்கள் அழியாமல் பேணி, பேண்தகு சூழல்விருத்தி நிலையை பேண வும் மாணவனுக்கு உந்துசக்தியாக விளங்குகிறது.

ப. அருந்தவம்.

# புலிகள் மீது தாக்குதலை நடத்தி அரசு யுத்தத்துக்கு தயாராகிறதா?

## திருமலை தமிழ் மக்கள் பேரவை கேள்வி

திருமலை

திருமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடருமானால், யுத்தமொன்றை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டுமென திருமலை மக்கள் பேரவை எச்சரித்துள்ளது.

இது குறித்து அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

மூதூரிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் மீது கடற்படையும் இராணுவமும் தொடர்ந்தும் தங்களது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமேயுள்ளனர். இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கும் பல தடவைகள் அறிவித்தும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே பல தாக்குதல்கள் நடத்தப்பட்ட நிலையில் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் மஹிந்தபுரம் இராணுவ முகாமிலிருந்த இராணுவமும் ஒட்டுப்படைகளும் இணைந்து தமிழீழ விடுதலைபுலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள காவலரண் மீது நடத்திய நயவஞ்சகத் தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்தும், இரண்டு போராளிகள் படுகாயமடைந்துமுள்ளனர்.

அரசாங்கம் - ஜெனீவா உடன்படிக்கையைப் பூரணமாக அமுல்படுத்துவதாகவும் ஒட்டுப்படைகளினது ஆயுதங்களைக் களைவதாகவும் கூறி, சர்வதேசத்தை ஏமாற்றிக் கொண்டு மீண்டும் மீண்டும் இவ்வாறான தாக்குதல்களை அனுமதித்துக் கொண்டிருப்பதென்பது அரசாங்கத்தின் இரட்டை வேடத் தன்மையையே காட்டுகிறது.

இவ்வளவு தாக்குதல்களையும் பார்த்துக் கொண்டு, தமிழீழ விடுதலைப்புலிகள் பேசாமல் இருக்கின்றார்கள் என்றால், அது சமாதானத்தின் மீதும், சர்வதேசத்தின் மீதும் வைத்திருக்கின்ற அளவுக்கதிகமான மரியாதையையே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாகவும், யுத்த வெறியர்களாகவும் காட்டிக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கமும் அரச ஊடகங்களும் மேற்கொள்ளும் சதிகார நடவடிக்கைக்கு இரையாகாமல், உண்மையான சமாதானத்தை நிலை நாட்டுவதற்குரிய பங்களிப்பைத் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களுக்கு ஏற்படும் இழப்புக்களைக் கூடப் பொருட்படுத்தாது வழங்கி வருகின்றனர்.

ஆனால், அரசாங்கமும் - படைத்துறை அதிகாரிகளும் சமாதான ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்துவிட்டு செயற்பட நினைத்தால், அதன் விளைவுகள் மிகப்பெரியதாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஒட்டுப்படைகள் என்ற போர்வையிலும், கருணாஅணி என்ற போர்வையிலும் செயற்படுபவர்கள் முற்றுமுழுதாக இராணுவமே.

தமிழ் பேசுவதற்காகவும், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும் ஓரிரண்டு காட்டிக்கொடுக்கும் தமிழர்களைப் படையிலும், புலனாய்வுத் துறையிலும் இணைத்துக் கொண்டு செயற்படும் இத்தகைய தாக்குதல்கள் நிறுத்தப்படாவிட்டால், ஏப்ரல் 19ஆம் திகதியிலிருந்து நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்பட்டு, யுத்தமொன்று ஆரம்பிக்கும் சூழ்நிலையை உருவாக்கிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்தையே சேரும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பலம் எத்தகையது என்பதனை உணருவதற்கு தேசத்துக்கு அப்போதுதான் சந்தர்ப்பம் ஒன்று ஏற்படும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (01)



ஆசிய பசுபிக் வலய நாடுகளின் பதிவாளர் நாயகங்களுக்கான மாநாடு அண்மையில் பாங்கொங்கில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் வடவயை உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயரும் கலந்துகொண்டார் . (வலமிருந்து இடமாக நிற்பவர்கள்) உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர், ப்ளான் சிறிலங்கா அமைப்பின் பணிப்பாளர் மிக்கேலாஹெலி, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சந்தனி விக்கிரமசிங்க ஆகியோர் பாங்கொங்கில் எடுத்துக்கொண்ட படத்தைக் காணலாம். (ரி)

# ஊர்காவற்றுறை பஸ்சேவை 5 ஆம் திகதி முதல் நேர மாற்றம்

யாழ்ப்பாணம்

யாழ். பஸ்நிலையத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கான பஸ்சேவை எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் காலை 8 மணிக்கும் 8.30 மணிக்குமாக இரண்டு தடவைகள் இடம்பெறவுள்ளன.

இதுவரைகாலமும் காலை 8.45 மணிக்குப் பஸ்புறப்படுவதால் - ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் ஆகியோர் உரிய நேரத்துக்கு கடமைக்கு சமூகமளிக்க முடிவதில்லை. இதனால் ஏற்படும் சிரமத்தை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதன் மூலமாக பஸ்சேவை காலை 8 மணிக்கும் 8.30 மணிக்குமாக இரண்டு பஸ்சேவை நடைபெறுவதால் நெருக்கடியின்றி சுலபமாகப் பயணம் செய்யவும், நேரகாலத்துக்குக் கடமைகளுக்குச் சமூகமளிக்க முடியுமெனவும் அரச ஊழியர்கள் தெரிவித்தனர். (110)

# சக்தி மகளிர் இல்லத்தின் மாடிக்கட்டடத் திறப்புவிழா



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அரசடித்தீவு கிராமத்தில் இயங்கி வரும் சக்தி மகளிர் இல்லத்துக்கு சுவிஸ் லூசோன் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய தர்மகர்த்தா சபையினரின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடத்தின் திறப்புவிழா நிகழ்வு - நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

சக்தி மகளிர் இல்ல ஸ்தாபகரும் தலைவருமான சி.புஸ்பலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சி.சோ.பானு, சுவிஸ் லூசோன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தர்மகத்தா எஸ்.கிறிதோப்பர் ஆகியோர் கலந்துகொண்டு மாடிக்கட்டடத்தைத் திறந்துவைத்தனர்.

அத்தோடு இந்த வைபவத்தில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் பிரபா, தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கேசவன், மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரபா, தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கேசவன், மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்மதி, மாவட்ட தளபதிநாகேஸ், துணைத் தளபதி ரமணன், மாவட்ட காவல் துறைப் பொறுப்பாளர் மனோகரன், பட்டிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் தயாசீலன் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள், இணைப் பாளர்கள், பாடசாலை அதிபர்கள், இந்து ஆலய குருமார்கள், இல்ல மாணவர்கள் பொதுமக்கள் எனப்பலர் கல ந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் - கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி பாடசாலைகளின் அழகெழல் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய அழகெழல் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு -

குழு இசை தரம் 6,7,8 -

1 ஆம் இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

அபிநயப்பாடல் தரம் 4,5 -

1 ஆம் இடம் - தர்மபுரம் மகா வித்தியாலயம், 2 ஆம் இடம் - கனகபுரம் மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் - ஜெயபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

குழு நடனம் -

1 ஆம் இடம் - கனகபுரம் மகா வித்தியாலயம்.

சிறுவர் நாடகம் -

1 ஆம் இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் - தர்மபுரம் மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் - கனகபுரம் மகா வித்தியாலயம்.

அழகெழல் சிறப்புக் கேடயம் பெறும் பாடசாலை -

புனித திரேசா மகளிர் கல்லூரி, ஜெயபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

சித்திரப்போட்டி முடிவுகள் -

பிரிவு 1 (தரம் - 4,5)

1 ஆம் இடம் - இ.சாளினி - தருமபுரம் அ.த.க பாடசாலை, 2 ஆம் இடம்- செ.ஜேம்ஸ் கலையரசன் - தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை, 3 ஆம் இடம் - ம.பேராஜினி - கிளி.பாரதி வித்தியாலயம்.

சிறப்புக் கேடயம் பெறுவோர் -

பு.மதுசா - கிளிநொச்சி மகா வித்தியாலயம், சோ.ரிசாந்து- இராமநாதபுரம் மகா வித்தியாலயம், தி.ரதினி - தர்மபுரம் அ.த.க. பாடசாலை.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர் -

ம.குமாரி - தம்பிராசபுரம் அ.த.க. பாடசாலை, த.நிக்ஷன் - தர்மபுரம் இல 1 அ.த.க. பாடசாலை, ஸ்ரீ.சுபோதினி - இயக்கச்சி அ.த.க பாடசாலை.

பிரிவு 2 (தரம் 6,7,8) -

1 ஆம் இடம் நா.ஜெயசிறி - கிளிநொச்சி ம.வி, 2 ஆம் இடம் செ.கேதாரநாதன் - அக்கராயன் அ.த.க. பாடசாலை, 3 ஆம் இடம் ஆ.காங்கேயன் கிளிநொச்சி மத்திய கல்லூரி.

சிறப்புக் கேடயம் பெறுவோர் -

இ.யேசுதாஸ் - இயக்கச்சி அ.த.க. பாடசாலை, உ.தைமிதன் - மத்திய கல்லூரி, ப.றினோசன் - மத்திய கல்லூரி.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-

ர.மலரினி - புனித தெரேசா பெண்கள் கல்லூரி, த.அனுசா - அக்கராயன் அ.த.க. பாடசாலை, ச.சசிகலா - ஜெயபுரம் அ.த.க பாடசாலை, ஜெ.முகிலன் - பாரதி வித்தியாலயம்.

பிரிவு 3 (தரம் 9,10,11) -

1 ஆம் இடம் உ.அனுராஜ் - பூநகரி நல்லூர் ம.வித்தியாலயம், 2 ஆம் இடம் ந.டினோஜன் - பூநகரி நல்லூர் ம.வித்தியாலயம், 3 ஆம் இடம் ச.அசோக்குமார் ஜெயபுரம் அ.த.க. பாடசாலை, 3 ஆம் இடம் எ.லக்ஷன் - கிளிநொச்சி ம.வித்தியாலயம்.

சிறப்புக் கேடயம் பெறுவோர் -

ஆர்.கிருஷ்ணராஜ் - மத்திய கல்லூரி, ஜெ.ஜெயறஜன் - உருத்திரபுரம் மகா வித்தியாலயம், த.சுமன் - உருத்திரபுரம் மகா வித்தியாலயம்.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-

பெ.ருஷாந்தினி - பாரதி வித்தியாலயம், ம.ஜிவாகரன் - மத்திய கல்லூரி, க.இந்திரகுமார் - உருத்திரபுரம் மகா வித்தியாலயம், மகா சுதமஸ் - முழுங்காவில் ம.வித்தியாலயம்.

பிரவு 4 -

1 ஆம் இடம் இ.சசிகரன் - கிளி. திருவையாறு ம.வித்தியாலயம், 2 ஆம் இடம் ஜெ.மயூரகாஸன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் ஜெ.ஜெயஎலக்ஷன் கிளிநொச்சி மத்திய கல்லூரி.

சிறப்புக் கேடயம் பெறுவோர் -

வ.கவிதாஸ் - உருத்திரபுரம் மகா வித்தியாலயம், பூ. ருத்திரா - இராமநாதபுரம் ம.வித்தியாலயம், பெ.சதாசிவம் - கனகபுரம் மகா வித்தியாலம்.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-

சா.சர்மிளா - கிளிநொச்சி மகா வித்தியாலயம், செ.சிவகணேசன் - மத்திய கல்லூரி, பா.நிஷாந்தன் - கனகபுரம் மகா வித்தியாலயம், சபானா - முழுங்காவில் ம.வித்தியாலயம், சு.சசிக்குமார் - முருகானந்தா ம.வித்தியாலயம்.

ஆசிரியர் தரம் -

1 ஆம் இடம் ச.தர்மதாஸ் - கனகபுரம் மகா வித்தியாலயம், 2ஆம் இடம் சூ.பரஞ்சோதி - மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் திருமதி. செ.தெய்வேந்திரமூர்த்தி -கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

சிறப்புக்கேடயம் பெறுவோர் -

ஆர். வித்தியானந்தன் - கிளிநொச்சி ம.வித்தியாலயம், திருமதி. சு.ஜோய் றொபின்சன் - புனித தெரேசா பெண்கள் கல்லூரி.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-

ச.சந்திரவதனி - உருத்திரபுரம் மகா வித்தியாலயம், நா.ஜெயதேவி - கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை.

# மூதூர் - பாட்டாளிபுரம் கிராமத்துக்கு குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை

திருகோணமலை

திருகோணமலை மாவட்டம் மூதூர் - பாட்டாளிபுரம் கிராமத்துக்கு முதற்தடவையாகத் தினமும் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

மிகவும் பின்தங்கிய, வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழும் 450 குடும்பங்களைக் கொண்ட பாட்டாளிபுரம் கிராமத்தில் - சுத்தமான குடிநீரோ, ஏனைய அன்றாடத் தேவைகளுக்கான நீரோ கிடைப்பதில்லை.

எழுத்தறிவு மட்டம் மிகவும் குறைந்த இந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையால் தொற்று நோய்கள் மிக அதிகளவில் ஏற்படுவது வழமை.

இத்தகைய நிலையில் இந்தப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக அத்தியாவசிய தேவையாக இருந்து வந்த குடிநீர் தட்டுப்பாட்டுக்குக் கடந்த 25 ஆம் திகதி சனியன்று ஆரம்ப கட்டத் தீர்வு ஒன்றை இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருகோணமலை சேகரம் வழங்கியுள்ளது.

கிராமத்தின் 6 பொதுஇடங்களில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தாங்கிகளுக்குத் தினமும், தோப்பூர் பிரதேசத்திலிருந்து சுத்தமான குடிநீர் பவுசர் மூலம் கொண்டு சென்றுவழங்கப்படும் செயற்திட்டம் கடந்த சனியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கெனப் பாட்டாளிபுரம் கிராமத்தின் தனிப்பட்ட பாவனைக்கென தண்ணீர்தாங்கியுடன் கூடிய உழவு இயந்திரம் ஒன்று ரூபா 12 இலட்சம் செலவில் மெதடிஸ்த திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் பேராயர் பேரருள்திரு.எபினேசர் ஜோசப் ஆண்டகையால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் சார்பில் திருகோண்மலை மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் யோ.புரட்சி சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

பாட்டாளிபுரம் கிராமம் - தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள, இலங்கை அரசினால் சரி வர கவனத்தில் கொள்ளப்படாத, மிகவும் பின்தங்கிய பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## சட்ட ஒப்புதல் பெறாமல் மதுபானம் விற்றவர் கைது

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி - கட்சன் வீதிப்பகுதியில் அனுமதியளிக்கப்பட்ட மதுபானத்தை சட்ட ஒப்புதல் பெறாமல் தனது வீட்டில் வைத்து விற்பனை செய்த ஒருவர் வட்டக்கச்சி காவல்துறைப் பணிமனையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கடந்த 21 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் பிரதேச காவல் பணிமனையினரின் திடீர் சோதனையின் போது 17 1/2 போத்தல் அனுமதிக்கப்பட்ட மதுபானமும், 500 இற்கும் மேற்பட்ட வெற்றுப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை வட்டக்கச்சி காவல்துறை பணிமனையில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டதுடன் விசாரணைக்காக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு அரசாங்கத்தால் கைவிடப்பட்ட நிலையில்!

### மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு—

சுனாமி அனர்த்தத்தால் பேரழிவைச் சந்தித்த முல்லைத்தீவு பிரதேசத்தை அரசாங்கம் கைவிட்டதால் 15 மாதங்களாக எந்தவித புனரமைப்புப் பணியும் அங்கு மேற்கொள்ளப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.சோதிநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவின் கரைத்துறைப்பற்றுப் பகுதி சுனாமி அனர்த்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட இடமாகும். எதுவித அடிப்படை வசதிகளோ, ஆளணி வளமோ இல்லாததால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

பிரதேச செயலாளர்கள், பிரதி பிரதேச செயலாளர்கள், நில அதிகாரிகள் என எவருமே இங்கில்லை. கிராம அலுவலர் பிரிவுகளில் கூட தொழில்நுட்ப அதிகாரிகள் இல்லை. ஆகையால் சேதமடைந்த கட்டடங்களை மதிப்பிட இயலவில்லை.

முல்லைத்தீவு மாவட்டம் போராலும், சுனாமி கடல் அனர்த்தத்தாலும் பாரியளவில் பாதிக்கப்பட்டது. 15 மாதங்களைக் கடந்த நிலையிலும், 2 ஆயிரம் பேர் தொடர்ந்தும் தற்காலிக முகாம்களிலேயே வசித்து வருகின்றனர்.

இந்த நிலைமைகள் தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. உரிய கவனிப்பின்றி இன்னமும் வீதிகள் புனரமைக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் 46 கிராம அலுவலக பிரிவுகள் உள்ளன. கரைத்துறைப்பற்று பகுதியில் 18 பிரிவுகள் அடங்குகின்றன. இவற்றில் 8 கிராம அலுவலக பிரிவுகள் சுனாமியால் பாரிய அழிவுக்குள்ளாகியுள்ளன.

மொத்தம் 3 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தனர். 5 ஆயிரத்து 500 வீடுகள் முழுமையாக அழிந்தன. 3 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தனர். ஆயிரம் பேர் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

தற்காலிக முகாம்களில் வசிப்போர் நிலைமை தொடர்பாக நாம் மிகுந்த கவலை கொள்கிறோம். எந்த ஒரு மீளமைப்புப் பணியையும் மேற்கொள்ள நிர்வாக அதிகாரிகள் எவரும் இல்லை. எமது அலுவலகமும் கடற்கரையிலிருந்து 200 மீற்றர் தொலைவில் இருந்தது. சுனாமியால் அனைத்து ஆவணங்களும் அழிந்துவிட்டன. காணிகள் தொடர்பாக ஆவணங்களை இழந்துவிட்டமையால் மீளமைப்புப் பணிகளுக்குத் தடையாக இருக்கிறது.

அரசாங்கம் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்கிறது. ஆனால், வடக்கில் விலை உயர்வின் அடிப்படையில் ஒரு வீடு கட்ட ஐந்து லட்சம் ரூபா அவசியம்.

முல்லைத்தீவு மருத்துவமனையிலும் ஆளணி வளம் இல்லை. இருப்பினும் தற்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் தரவுகளைச் சேகரித்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் 15 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## நெய்தல் நில வழுமைதாரர் மையம் மன்னார்–விடத்தல்தீவில் திறந்துவைப்பு

மன்னார்—

மன்னார் – விடத்தல்தீவு பிரதேசத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கியால் கடற்தொழிலாளர்களின் நன்மைகருதி நெய்தல் நில வழுமைதாரர் மையம் ஒன்றைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி வங்கி பொது மேலாளர் தவக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை மாவீரர் லெப்டினன்ட் அரவிந்தனின் தந்தை வேதநாயகம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் செழியன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை மீனவர் சங்க ஒன்றியத்தலைவர் பெரும்பாக உதவியகத்தர், கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா நிகழ்த்தினார்.

வங்கியின் பெயர்ப்பலகையை விடத்தல் தீவுப் பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு திரைநீக்கம் செய்து வைத்தார். வங்கிக் கட்டடத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வங்கி நடவடிக்கையை விடத்தல் தீவுப் பங்குத் தந்தை அருள்தாஸன் அடிகளார் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இரண்டு பயனாளிகளுக்கு சூரிய ஒளி மின்கலத் தொகுதிகளும், மூன்று பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடனும் வழங்கப்பட்டன.

இந்தப் பிரதேச மக்கள் தொடர்ந்து வங்கியின் பல்வேறு வைப்புக்கணக்குகளை ஆரம்பித்து வாடிக்கையாளராக இணைந்து கொண்டனர். (பூ)

## அடிக்கல் நாட்டு விழா!

பூநகரி—

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கறுக்காய்த்தீவுக் கிளைக்கான அடிக்கல் நாட்டு விழா – நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது.


கிளைக்குழுத் தலைவர் ந.பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு, பொது முகாமையாளர் இரத்தினசிங்கம், உதவிப் பொது முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (கு)

## நிதியுதவி!

கிளிநொச்சி—

கிளிநொச்சி பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் பொன்நகர் கிராமத்தில் பிரதான குடியிருப்பாளரை இழந்த 10 பெண்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்த நிகழ்வு ஆரம்பமானது. இதில் பிரதேச இணைப்பாளர் சிவரூபி, கிராமப் பணியாளர் துவேந்தினி ஆகியோர் கலந்து கொண்டு நிதியுதவிகளை வழங்கினர். (09)



நிகொட் நிறுவனத்தால் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு கையளிக்கப்பட்ட 30 லட்சம் ரூபா பெறுமதியான இயன் மருத்துவப் பிரிவுக்கான உபகரணங்களைப் படங்களில் காணலாம்.

## நெசவுப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி படி வழங்கப்படுவதில்லை

வட்டக்கச்சி—

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம், தர்மபுரம் ஆகிய பிரதேசங்களில் அரச நெசவு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு நெசவு நிலையத்திலும் 40 பேர் நெசவு பயிற்சியாளர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு பயிற்சிப் படியாக 200 ரூபா வழங்கப்பட்டு வந்தது.

இவர்களுக்கான பயிற்சிப் படி கடந்த மாதம் முதல் வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்களிடம் முறையிடப்பட்டது. இதுவரையில் எந்த வித பதிலும் கிடைக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து, தமக்கான நாளாந்தப் படியை வழங்குமாறு பாதிக்கப்பட்ட பயிற்சியாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (09)

## கடற்தொழிலாளர் சங்கம் புனரமைப்பு

வடமராட்சி கிழக்கு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்தொழிலாளர் சங்கம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு, செயற்படத் தொடங்கியுள்ளதாக அதன் தலைவர் காண்டீபன் தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு அதன் செயலாளராக மு.வி.தர்மகுலசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## குஞ்சுப்பரந்தன் அம்மன் ஆலய பங்குனித்திங்கள் வேள்வி விழா

பரந்தன்—

வன்னிப் பிரதேசத்தில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஆலயமான கிளிநொச்சி – குஞ்சுப்பரந்தன் அருள்மிகு பொறிக்கடலை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் வேள்வி விழா எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றுகாலை அபிஷேக ஆராதனைகள், கொடியேற்றம், விசேட பூசை, அன்னதானம் முதலானவையும், இரவு அம்பிகை வீதியுலாவருதல் அதிகாலை விசேட பூசை, பொங்கல், தீமிதிப்பு, நீர்ச் சோறு வழங்குதலான சிறப்பு சமய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்துக்கு வன்னிப்பிரதேசத்தின் பலபாகங்களிலிருந்தும் பெருமளவிலான பக்தர்கள் வருகை தந்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து)

## வீடுகள் கையளிப்பு

கிளிநொச்சி—

சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் - கல்லாறுப் பகுதியில் 5 லட்சம் ரூபா செலவில் 143 வீடுகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரால் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. (09)

## “வெளிச்சம்” வெளிவந்தது!

கிளிநொச்சி—

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான “வெளிச்சம்” கலை இலக்கிய சஞ்சிகையின் 94 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத்தலைவரின் கருத்துரை, மாலிகா, புதுவை இரத்தினதுரை, தி.திருக்குமரன், சத்தியமலரவன், த.ஜெயசீலன், சோ.பத்மநாதன் தாமரை, வளநாடன் ஆகிய கவிஞர்களது கவிதைகள், ஆசி.கந்தராசா, ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோரது சிறுகதைகளும், தூயவன், அமரதாஸ், தமிழவன், மகாநபவன் ஆகியோரது கட்டுரைகளும், சு.மகேந்திரன் வின் சென்ற் புளோறன்ஸ் ஆகியோரது மொழி பெயர்ப்புகளும், தூது, அஞ்சலி, புதிய வரவு போன்றவற்றைத் தாங்கியே இந்த இதழ் வெளிவந்துள்ளது. (09)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்!

வவுனியா—



பத்தன்மோட்டை, கண்டாவளையைச் சேர்ந்த ஆறுமுகம் சுபாஸ்கரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்து கொண்டார்.

ஆறுமுகம் மகேஸ்வரி தம்பதிகளின் மகனான இவர் - வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய ஆசிரியரும், கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலய பழைய மாணவரும், சிரேஷ்ட தொழில் வழிப்படுத்துனருமான இவர் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியில் “கற்பித்தலில் தேசிய டிப்ளோமா” பட்டத்தையும், யாழ். பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

கொழும்பு சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகத்தில் உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியைப் பயின்றுவரும் இவர் பத்திரிகையாளராகவும் பணியாற்றிவருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (03)

## வருடாந்த திறனாய்வுப் போட்டி

வட்டக்கச்சி—

கிளிநொச்சி - காந்தி கிராமத்திலுள்ள கரிகாலன் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த திறனாய்வுப் போட்டி - இன்று பிற்பகல் 1 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த முன்பள்ளி தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்குபடுத்தலில் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(09)

## பராக்கிரமபாகு கப்பல் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த கரும்புலிகளின் நினைவுநாள்

முல்லைத்தீவு—

இலங்கை கடற்படையின் பராக்கிரமபாகு கப்பல் தொகுதி மீதான தாக்குதலில் வீரகாவியமான 4 கடற் கரும்புலி மாவீரர்களின் 9 ஆம் ஆண்டு நினைவு தினம் அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி முல்லை கடற்பரப்பில் இலங்கை கடற்படையின் பராக்கிரமபாகு கப்பல் மற்றும் டோறாப் பீரங்கிப் படகுகள் மீது தாக்குதல் நடத்தி வீரகாவியமான மேஜர் தமிழ்மாறன், மேஜர் நாவலன், கப்டன் வானதி, கப்டன் கலைவள்ளி, கடற்புலி சுகுணன் ஆகியோராவர்.

இந்தத் தாக்குதலில் சேதமாக்கப்பட்ட பராக்கிரமபாகு கப்பல் சுனாமியின் போது அழிந்து போனமை குறிப்பிடத்தக்கது. (கு)

# நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# ஏன் இந்த ஓட்டம்

இராணுவ கனரக வாகனங்களின் அதிவேக ஓட்டங்களால் இப்போது மீண்டும் குடாநாட்டு வீதிகள் பாதுகாப்பற்றவையாக மாறி விட்டன.

ஏதோ தாம் பெரும் பலத்துடன் இருப்பது போல காட்டிக் கொள்வதற்காகப் போலும் - டாங்கிகள், பவள் கவச வாகனங்கள், கனரக வாகனங்களில் படையினர் ரோந்து சுற்றி வருகின்றனர். கடந்த டிசம்பர், ஜனவரி மாத அசாதாரண நிலைமாற்றம் கண்டபோதும் படையினரின் இந்த ரோந்து நடவடிக்கைகளில் மட்டும் மாறுதல் தெரியவில்லை.

குடாநாட்டு வீதிகள் எங்கும் பவள் கவச வாகனங்கள் கண்டபடி வேகத்தில் ஓடித்திரிகின்றன. அதுபோலத்தான் டாங்கிகள், டாங்கிகளை ஏற்றும் வாகனங்களும் வீதிக் கட்டுப்பாடுகளுக்கு மாறாக - தாறுமாறாக ஓடுகின்றன.

இதனால் அன்றாடம் விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. அண்மையில் பவள் கவச வாகனம் மோதிய ஒருவர் திருநெல்வேலிப் பகுதியில் படுகாயமடைந்தார். சம்பவ இடத்துக்குப் புகைப்படம் எடுக்கச்சென்ற ஊடகவியலாளர்களைக் கூட படையினர் துரத்திவிட்டனர்.

அந்த விபத்தை மறைப்பதற்கான ஒரு முயற்சியாகவே இதைக் கருத வேண்டும். இதுபோலவே நேற்று முன்தினம் கட்டுப்பாடின்றிச் சென்ற பவள் ஒன்று அதியுயர் வலுக் கொண்ட மின்கம்பத்துள் புகுந்து விளையாடியிருக்கிறது. இது நடந்தது மந்திகையில்.

ஏற்கனவே, நெல்லியடியில் பவள் ஒன்று வீட்டு மதிலை உடைத்துக்கொண்டு உட்புகுந்த சம்பவமும் இடம்பெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் 6 வயதுச் சிறுவன் ஒருவன் மயிரிழையில் உயிர் தப்பினான்.

சில நாட்களுக்கு முன்னர், யாழ்.நகரில் ஓ.எல்.ஆர் தேவாலயம் அருகே டாங்கிகளை ஏற்றிச் செல்லும் பாரிய வாகனத்தின் பின்புற இரும்புக்கவச மடிப்புக் கழன்று வீழ்ந்தது. இந்த வாகனத்துக்குப் பின்னால் மோட்டார் சைக்கிளில்வந்த மூவர் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தனர்.

இப்படி குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இராணுவ வாகனங்களின் அத்துமீறிய ஓட்டம் குறித்து நாளாந்தம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. போர்க்களத்தில் பயன்படுத்த வேண்டிய கவச வாகனங்களை நகர்ப்புறங்களில் ஓடவிட்டு பொது மக்களை ஆபத்துக்குள்ளாக்குவது சரியான நடைமுறை தானா?

இராணுவத்தினரின் கவச வாகனங்களைச் செலுத்துவதற்கு லாவகம் இருக்க வேண்டும். அப்படி லாவகமாகச் செலுத்த முடியாத சாரதிகளுக்கு யாழ்ப்பாணவீதிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறதா என்று தெரியவில்லை.

இல்லாவிடின் இப்படிப்பட்ட விபத்துகள் நிகழ்வதற்கு வேறு காரணம் இருக்கவேண்டும். முதலாவது சாரதியின் தவறாக இருக்கலாம். இரண்டாவது வாகனம் பயன்பாட்டுக் குதவாததாக இருக்கலாம். மூன்றாவது வேண்டுமென்றே இப்படி நடந்து கொள்வதாக இருக்கலாம்.

இவை தவிர, வேறு காரணங்கள் இப்படிப்பட்ட சம்பவங்களுக்குக் காரணமாக இருக்க முடியாது. குடாநாட்டு மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் உளவியல் போர் நடவடிக்கையின் ஒரு கட்டமாகத் தான் படைத்தரப்பு இப்படி நடந்துகொள்கிறது.

இந்த டாங்கிகள், கவச வாகனங்களின் தாறுமாறான ஓட்டமும், அதனால் ஏற்படும் விபத்துகளும் குடாநாட்டு மக்களை அச்சுறுத்தாத அதேவேளை, இவர்கள் மத்தியில் பெரும் விசனத்தைத்தான் ஏற்படுத்தும்.

ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று விசனமடைகிறவர்கள் ஏராளம். அதிலும் இராணுவ வாகன விபத்துக்களால் குடாநாட்டில் எத்தனையோ பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக பாரிய மோதல் சம்பவங்கள் கூட இடம் பெற்றிருக்கின்றன.

நகரவீதிகளில் படையினரின் கவச வாகனங்களின் தாறுமாறான ஓட்டம் விபத்துக்கள், உயிரிழப்புகளில் முடிந்ததால் மக்களின் கோபத்தை மீண்டும் கிளறிவிட்டதாகவே முடியும்.

இதுபோலவே, இராணுவத் தொடரணிகள் செல்லும் போது பொதுமக்களை நீண்டநேரம் மறித்து வைத்து படையினர் வெறுப்பூட்டும் சம்பவங்களும் அதிகரித்து விட்டன. இந்தச் செயல்கள் பொதுமக்கள் மத்தியில் பெரும் அசௌகரியத்தையும், விசனத்தையும் ஏற்படுத்துகிறது.


இவ்வாறு இராணுவ அதிகாரிகளும், அமைச்சர்களும் கூட குளிரூட்டிய கவச வாகனங்களில் உலாவர - பொது மக்கள் அவர்கள் செல்லும் வரை கொதிக்கும் வெயிலில் நீண்ட நேரம் வீதிகளில் நிறுத்தப்படுகின்றனர்.

இராணுவத் தரப்பின் இத்தகைய அத்துமீறல்கள் குடாநாட்டு மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் விசனத்தை அதிகப்படுத்தி வருகிறது. இத்தகைய விசனத்தின் வேகத்துக்கு முன்பாக இராணுவ கவச வாகனங்களால் நிற்க முடியாத கட்டம் ஒன்று ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

எனவே படைத்தரப்பு மக்களின் இயல்பு வாழ்வைக் குழப்பாமல் அவர்களின் பாதுகாப்பில் அக்கறையின்றி செயற்படும் போக்கைத் தவிர்ப்பதுதான் புத்திசாலித்தனமானது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




நன்றி :- ஐலண்ட்

# இலங்கைப் படையில் இஸ்லாமிய அணி!

## பாதுகாக்கவா பிளவேற்படுத்தி சிதைக்கவா?

### ஊர்சுற்றியார் எழுதுவது

இலங்கை இனப்பிரச்சினையில் தமிழ் மக்கள் பலம் பொருந்திய ஆயுதப்படையை உருவாக்கி சிறிலங்கா அரச படைகளுக்கு மட்டுமல்லாமல் எந்தப் படையையும் எதிர்த்துச் சவால் விடக்கூடிய நிலையில் வளர்ந்திருக்கிறார்கள் என்பதை சிறிலங்கா ஆட்சியாளர்களும் அறிந்திருக்கிறார்கள். சிறிலங்காவின் நேசநாடுகளும் உணர்ந்திருக்கின்றன.

தமிழ் மக்களின் பாதுகாப்புப் படையான தமிழீழ விடுதலைப் புலிப்படைகளை எதிர்த்து முறியடித்து வெற்றிகொள்வதற்கு உலகில் சக்திவாய்ந்த அரசுகள் சிறிலங்கா அரசின் ஆயுதப் படைகளுக்கு அள்ளிஅள்ளிக் கொடுத்த ஆயுதங்களும் படைச் சாதனங்களும், ஆலோசனைகளும்கூட எந்தப் பயனையும் தரவில்லை! சிறிலங்காப்படையினருக்குச் சேதமில்லாமலும், அவரகளுக்கு வெளிநாடுகள் வழங்கும் ஆயுதங்கள் தமிழர் படைக்குப் போகாமல் தடுக்கவும் இந்தியப்படையை அமைதிப் படையாகக் கொண்டுவந்தும் அவர்களும் உயிரிழப்புடன் திரும்பிச் சென்று விட்டனர்.

தமிழர்களின் விடுதலைப் படையை வெற்றிகொள்வது சுலபமல்ல. தமிழர்களுக்குள் குழுக் களை வளர்த்து ஆயுதங்களைக் கொடுத்து மோதவிடுவது, தமிழ் பேசும் மக்களாகிய இஸ்லாமிய மக்களைத் தமிழர் படைகளுக்கு எதிராகத் தூண்டிவிடுவது மற்றொருவழி.

இஸ்லாமிய ஊர்காவல்படை அமைத்து தமிழர் படையைப் பலவீனப்படுத்தப் பிரயத்தனம் செய்தனர். தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் மோதல் ஏற்படுத்தப் பலதடவைகளில் எத்தனங்கள் செய்யப் பட்டன.

1. தமிழர்கள் தங்களுக்கிடையில் ஆயுதக்குழுக்களாகப் பிளவுபட்டு மோதித் தமிழ்ச் சமூகம் பிளவுபட்டு நிற்க வேண்டும்.
2. தமிழ் பேசும மக்கள் தமிழர்கள் இஸ்லாமியர்கள் எனறு பிரிந்து ஒருவரோடு ஒருவர் மோதிச் சிதறுண்டு நிற்கவேண்டும்.

இப்படியான வேறுபாடுகளை ஏற்படுத்தி விட்டால் தமிழர்கள் தங்களுக்கு தமது தாயகத்தில் சுயாட்சி உரிமையுள்ள சுதந்திர ஆட்சி அமைப்பு வேண்டுமென்று கோரிப் போராட்டம் நடத்த மாட்டார்கள் என்பது ஆதிக்க சக்திகளான பேரினவாதிகளின் திட்டமாகும் என்று பரதேசியார் என்முன் அமர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்தச் சிந்தனையின் வெளிப்பாடுதான் இலங்கை இராணுவத்தில் முஸ்லிம் படையணி அல்லது கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கெனத் தனிப் படையணி அமைப்பதாகும்.

இவ்வளவு காலத்துக்குப் பின்னர் இலங்கையின் பாதுகாப்புப் படைகளில் முஸ்லிம்களுக்கெனத் தனிப்பிரிவு அமைப்பதற்கு என்ன அவசியமும், அவசரமும் ஏற்பட்டது? சுதந்திர இலங்கையின் முதல் இராணுவத்துக்குத் தளபதியாக அன்ரன் முத்துக்குமாரு என்ற தமிழர்தான் தலைமை தாங்கிச் சிறப்பாகச் செயலாற்றினார்.

கடற்படையில் இராஜன் கதிர்காமர் தளபதியாக இருந்து பிறருட் வியக்கும் வண்ணம் செயலாற்றினார். பண்டாரநாயக்கவின் சிங்களம் மட்டும் சட்டமும், "அப்பே ஆண்டுவ" முழக்கமும் வந்ததைத் தொடர்ந்து ராஜன் கதிர்காமரைக்கூட சிங்கள ஆதிக்கநதிய சக்திகள் ஒரு நாள் வீட்டுக்காவலில் வைத்துப் பின் விடுதலை செய்தது.

இநத மனப்பான்மை தொடர்ந்து பாதுகாப்புப்படைகளுக்குள்ளும், சந்தேகத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியதாலும் தமிழ்மக்கள் மீது அவநம்பிக்கையேற்பட்டதாலும் ஆயுதப்படைகளில் தமிழர்களைச் சேவைக்கு எடுப்பது படிப்படியாகக் குறைந்தது. ஆயுதப்படைகளுக்கு மட்டுமல்ல சகலதுறைகளிலும் தமிழர்கள் தெரிவுசெய்யப்படுவது குறைந்து நிறுத்தப்பட்டதென்றே சொல்லலாம்.

இதற்குப் பதிலாக அரசாங்க சேவையில் இஸ்லாமிய அரசியல் தலைவர்கள் சிலரின் சிபார்சுகளில் முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.

இஸ்லாமிய இளைஞர்களுக்கு வேலைவாயப்பளிபபதற்காக என்று சொல்லியும், இஸ்லாமிய இளைஞர்கள் ஊர் காவல்படைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வேலைவாய்ப்பை வைத்துத் தமிழ்மக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்தவும் பேரினவாதிகள் திட்டமிட்டுச் செயற்பட்டனர்.

இதேபோல், கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் சொந்தமான பூர்வீகப் பிரதேசத்தில் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றிய ஆதிக்க சக்திகளான பேரினவாதிகள் சில இடங்களில் முஸ்லிம்களையும் குடியேற்றித் தமிழ்மக்களுடன் மோதலை ஏற்படுத்துவதற்கும் எத்தனித்தனர்.

இப்பொழுது இலங்கைப் பாதுகாப்புப்படைகளில் இஸ்லாமியர்களுக்கு அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கெனத் தனிப்பிரிவு அமைக்கத் திட்டமிட்டு இதற்கென ஆட்கள் தெரிவு செய்யப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இலங்கையின் பாதுகாப்புக்காகவோ இலங்கையில் வாழும் மக்களின் பாதுகாப்புக்காகவோ அல்லது இங்குவாழும் இஸ்லாமிய மக்களின் பாதுகாப்புக்காகவோ முன்னேற்றத்துக்காகவோ அமைக்கப்படுவது அல்ல.

ஆண்டாண்டு காலமாக தமிழர்களும் இஸ்லாமியர்களும் சகோதரர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

எங்காவது சில இடங்களில் சில சந்தர்ப்பங்களில் குடும்பத்தில் நடைபெறுவது போன்று இருதரப்பினருக்கிடையில் மோதலோ, முறுகலோ ஏற்பட்டாலும் பின்னர் இருதரப்பும் சகோதரர்களாக வாழ்வது வழக்கம். இப்போது நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளை வைத்து இஸ்லாமியர்களுக்கும், தமிழர்களுக்கும் நிரந்தரமான பகையை ஏற்படுத்துவதற்குச் சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமல்ல இஸ்லாமிய அரசியல்வாதிகள் சிலரும் கூட முயற்சி செய்கின்றனர்.

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வதற்கு பேரினவாதிகளும் அவர்களுடன் சுயநல தமிழ் இஸ்லாமிய அரசியல்வாதிகளும் சேர்ந்து தமிழ் பேசும் சமுகத்தைப் பிளவுபடுத்திச் சீர்குலைக்கப் பெரும்பாடுபடுகின்றனர்.

தமிழ்பேசும் சமூகம் தலை நிமிர்ந்து வாழமுடியாமல் அந்தச் சமூகத்துக்குள் பிளவேற்படுத்தும் நோக்கத்துடனேயே இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது தமிழ் இஸ்லாமிய சமூகத் தலைவர்களுக்கும் நன்கு தெரியும் என்று நான் சொன்னேன்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தைச் சாராதவராக இருந்தும் இஸ்லாமிய தமிழ்ச் சமூகங்களுக்கிடையில் பிளவையும், வேற்றுமையையும் ஏற்படுத்தி மோதல் உண்டாக்கவே இப்படியொரு திட்டம் கொண்டு வரப்படுவதாகப் பகிரங்கமாகவே எச்சரித்திருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதாவுல்லா வடக்கையும், கிழக்கையும் பிரிக்கவேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கிறார். இவர் தனிப்படைக்கு ஆட்சேபம் தெரிவிப்பாரா? இரு சமூகமும் பிளவுபட்டு நின்றால் சிங்களப் பேரினவாதிகள் இரு சமூகங்களையுமே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவார்கள் என்று பரதேசியார் சொன்னார்.

சக்தி வாய்ந்த ஆயுதங்களாலும், சக்தி வாய்ந்த படைச் சாதனங்களாலும், சக்தி வாய்ந்த படைப் பயிற்சிகளாலும் சாதிக்க முடியாத, போர்க்களத்தில் ஈட்ட முடியாத பெரு வெற்றியை சமுகங்களுக் கிடையில் மோதலை ஏற்படுத்திப் பிளவேற்படுத்திச் சாதிக்க முடியும் என்பதைச் சிங்களப் பேரினவாதம் நன்கறிந்திருக்கிறது.

இந்தச் சூழ்ச்சியை தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் நன்கு அறிந்தும் அற்பசலுகைகளுக்காகவும், பதவிச்சுகத்துக்காகவும் சமுதாயத்தையே விலை பேசுவதுதான் வேதனை.

என்றாலும் தன்மானமிக்க தமிழ் இளைஞர்களின் தியாகமும், துணிவும் இஸ்லாமிய இளைஞர்கள் திசைமாறிப்போகாமல் காப்பாற்றுமென்று நம்பலாம் என்றேன்.

இஸ்லாமிய இளைஞர்கள் எல்லோரும் ஏமாளிகளல்லர் வரலாறு தெரியாதவர்களுமல்லர் என்று சொல்லி எழுந்தார் பரதேசியார்.



# விடுதலைப் புலிகளுக்கு எதிரான உளவியல் போர் நடவடிக்கை!

**விடுதலைப் புலிகளை யுத்தத்தால் மட்டும் தோற்கடிக்க முடியாது. அவர்களைத் தோல்வியடையச் செய்வதற்கு உளவியல் யுத்த நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என ஆலோசனை கூறுகிறார் முன்னாள் இராணுவ அதிகாரியான லெப்.கேணல் சுசந்த செனவிரட்ண.**

**இவர் 'லங்காதீப' பத்திரிகையில் 'விடுதலைப் புலிகளுக்கு எதிரான உளவியல் யுத்த நடவடிக்கை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.**

நூற்றுக்கணக்கான யுத்தங்களில் கிடைக்கும் நூறு வெற்றி அதி சிறந்ததல்ல. ஆனால், யுத்தமோ, சண்டையோ செய்யாமல் எதிர்யுடைய அல்லது எதிர்த்தரப்பில் யுத்தம் செய்யும் படையை அல்லது எதிர்த்தரப்பில் யுத்தம் செய்யும் படையை அல்லது எதிர்ப்பை உடைப்பது அதிசிறந்த வெற்றியாகும்.

இது பூர்வவரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த சன்சூ எனும் சீன யுத்த தளபதியின் கூற்றாகும்.

சண்டை செய்யாமல் வெற்றியைப் பெறுவது எப்படி? அது பாரதூரமான சிக்கலாக இருக்கலாம். ஆனால், சன்சூவின் நடவடிக்கையை பகுப்பாய்வு செய்யும் ஒருவன் ஆயுதங்களில் மட்டும் தனது நம்பிக்கையை வைக்கமாட்டான்.

இலங்கை இராணுவத்தினர் கடந்த இருபது வருடங்களுக்கும் அதிககாலமாக ஆயுத மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதிக்குள் ஆயுத மோதல்களில் வெற்றிகள் பலவற்றையும் பெற்றுள்ளனர். வடமராட்சித் தாக்குதல், சூரியக் கதிர் என்பன இதற்கு உதாரணங்களாகும். ஆனால், நாம் எதனைக் கைப்பற்றியுள்ளோம். விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்வதில் நாம் வெற்றி பெறவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் வளர்ச்சியடைந்துள்ளனர். 1981 ஆம் ஆண்டு நிலைமையை விட இன்று விடுதலைப் புலிகள் மிகவும் பலமாக உள்ளனர். அவ்வாறெனில் எந்த இடத்தில் எமக்கு தவறு ஏற்பட்டது?

சன்சூ குறிப்பிட்ட விதமான நூறு யுத்தங்கள் மூலம் நூறு வெற்றியைப் பெறுவது அதிவிசேட செயல் அல்ல. நாங்கள் விடுதலைப் புலிகளைத் தோல்வியடையச் செய்வதற்கு ஆயுதங்களால் மட்டுமே முயற்சி எடுத்தோம். யுத்தக் கொள்கையின் படியும், யுத்த தர்மங்களின் படியும், யுத்த நோக்குகளின் படியும் யுத்தம் ஆயுதங்களால் மட்டும் நிகழ்வதல்ல. அதன் பலனாக நிகழ்கின்ற பல துறைகள் உள்ளன. அந்தத் துறைகளில் ஒன்று உளவியல் யுத்த நடவடிக்கையென அறிமுகப்படுத்தலாம்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட யுத்த முறைமையில் பொருளாதாரம், கல்வி அல்லது சிவில் நடவடிக்கைகள் தொடர்பாக வழிநடத்தல்கள் நிகழ்கின்றன. ஆனால், கெரில்லா யுத்த நடவடிக்கைகளை அழிக்கும்போது, அதனுடன் தொடர்புடைய உளவியல் யுத்த வழிநடத்தல்கள் அவசியமாகும்.

இலங்கையில் கெரில்லா யுத்தமே நிகழ்கிறது. இதன்போது, ஒரேநாட்டிலுள்ள இரண்டு பிரிவினர் யுத்தத்தின் தரப்பினராக உள்ளனர். இந்த மோதல்களில் பொதுமக்களும் சிக்கு வதை தடுக்க முடியாது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் - பொதுமக்களை வெற்றி கொள்வதற்கான ஒழுங்குமுறைகள் இருக்க வேண்டும். இதனைத் தெளிவுபடுத்துவதற்கு மிகச்சிறந்த உதாரணங்கள் உள்ளன.

பல்வேறு வகையான மீன்களைக் கொண்டுள்ள மீன்தொட்டியொன்றை நினைத்துக் கொள்ளுங்கள். மீன்கள் கெரில்லாக்கள். தொட்டியிலுள்ள நீர் பொதுமக்கள். நீரை வெளியேற்றிய பின் மீனைப் பிடித்துக்கொள்வது இலகுவானது. நீரை வெளியேற்றிய பின் மீன்கள் தாமாகவே அழிந்துவிடும். அவ்வாறு பொதுமக்களையும், விடுதலைப் புலிகளிடமிருந்து தூரவிலக்கி வெற்றி கொள்வதற்கு ஒழுங்குமுறைகள் அவசியமானதே. இது உளவியல் யுத்த நடவடிக்கையென அர்த்தப்படும்.

தனியே உளவியல் நடவடிக்கைகளை நடத்திச் செல்லக்கூடாது. அது தேசிய பாதுகாப்பு திட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும். உள்ளிருந்து அல்லது வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தல்களைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளலாம். அப்படியென்றால், கெரில்லா யுத்தத்தை அழிப்பதற்காக உளவியல் ரீதியான யுத்தத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். அது PSY OP என்ற சிறிய சொல்லின் மூலம் அறிமுகமாகும் ஒரு நடவடிக்கையாகும்.

மனித மனங்களுக்கு முதலிடம் கொடுத்து - அதன் தன்மை, ஆற்றல் மற்றும் பலவீனம் ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு செயற்படுத்தப்படும் செயல்களென அதனைப் பார்க்கலாம்.

போரியல் விஞ்ஞானத்துக்கு அமைய இந்த உளவியல் நடவடிக்கைகளை எவ்வாறு அர்த்தப் படுத்திக்கொள்ள முடியும். எதிரியுடைய அல்லது எதிர்த்தரப்பினர் நடவடிக்கை தன்மை, மனோ வலிமை மற்றும் கருத்துக்களை நன்றாக ஆராய்ந்து அரசியல் மற்றும் யுத்த செயற்பாடுகளின் அனுகூலங்கள் மற்றும் பிற விடயங்களைப் பெற்றுக்கொள்ளப்படும் உறுதியான திட்டத்துடன் செயற்படுத்தப்படுகின்ற பிரசார, வேறு இரகசிய திறந்த நிகழ்ச்சித்திட்டங்கள் உளவியல் யுத்த நடவடிக்கை என அறிமுகமாகும்.

யுத்த சித்தாந்த மற்றும் கோட்பாட்டுக்கமைய உளவியல் ரீதியான யுத்தம் உறுதியாக இரண்டு நோக்கங்களுக்காக நடத்தப்படவேண்டும். இதில் முதலாவது, பொதுமக்களுக்கு நம்பிக்கை, ஒத்துழைப்பு தனது எதிர்த்தரப்பினருக்கு எதிராக பெற்றுக் கொள்ளப்படும் அரசியல் மற்றும் யுத்த செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொள்ளல். அத்துடன் எதிர்த்தரப்பினரை தனிமைப்படுத்தி, அவர் குறித்த விபரங்கள் அந்த யுத்த மற்றும் அரசியல் பிரிவுக்குக் கிடைப்பதற்குத் திட்டமிடுதல்.

விசேடமாக வடக்கு - கிழக்கு பிரச்சினையில் இலக்காகக் கொள்ளவேண்டியிருந்த பிரிவுகள் இரண்டு. இதில் ஒன்று - அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், மற்றையது - போரில் ஈடுபடும் விடுதலைப் புலிகள். இந்த இரண்டு பிரிவினரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். எனினும் மதம், குலம் ரீதியாக வேறுபாடுகள் உள்ளன.

இதுபோன்ற வேறுபாடுகளை பல பிரிவினைவாதக் குழுக்களில் காணமுடியும். உதாரணமாக ஆப்கானிஸ்தானில் முஜாகுதீன் கிளர்ச்சிவாதக் குழுக்கள் 14 ஆகும். ஆனால் அவர்கள் பொது நோக்கத்துக்காகச் சண்டையிட்டார்கள். எனினும் அவர்களின் நோக்கம் இறுதியில் உடைந்து போனது.

பலஸ்தீன விடுதலைக்காக பதா அமைப்பு போரிடுகிறது. யசீர் அரபாத்தினுடைய இந்த அமைப்பை தோற்கடிப்பதற்காக ஹமாஸ் அமைப்பை இஸ்ரேலின் உளவு நிறுவனமான மொசாட் தோற்றுவித்தது. இறுதியில் ஹமாஸ் அதிகாரத்துக்கு வந்ததுடன், இஸ்ரேலுக்கு எதிராகப் போரிடவும் ஆரம்பித்தது. இதன் போது பதா அமைப்பை கலைத்து விடுவதற்கு மொசாட் உளவியல் நடவடிக்கையைப் பயன்படுத்தியது.

யுத்தக் கோட்பாட்டுக்கமைய உளவியல் யுத்த நடவடிக்கையைத் திட்டமிடுவது இரண்டாவது நோக்கமாகும். எதிர்த்தரப்பினரின் மனோ வலிமையை உடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அவர்களது உறுப்பினர்களைச் சரணடைய வைப்பது, அமைப்பை விட்டுத் தப்பியோடுவதற்குரிய திட்டமாகும்.

இது மிகவும் கடினமானது. இது போன்ற ஆயுதக் குழுக்கள் சரணடைவது, அமைப்பை விட்டு விலகிச் செல்வதென்பது அரிது. ஆனால், மிகவும் சிறிய குழுவினர் அமைப்பை விட்டுச் செல்லலாம்.

தற்போதைய பிரிவினைவாத போராளிகள் அமைப்புகளுக்குக் கிடைக்காத அரிதான பல சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைத்தன. 1985 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மற்றைய அமைப்புகளை தாக்கிய வேளை நாம் அந்தப் பக்கம் பாராமல் அமைதியாக இருந்தோம். அந்தச் சந்தர்ப்பத்தில் நடத்தியிருக்க வேண்டிய உளவியல் செயற்பாடுகளை நாம் மறந்துவிட்டோம். அதன் விளைவுகளைத் தற்போது நாம் அனுபவிக்க நேர்ந்துள்ளது.

எவ்வாறாயினும் உளவியல் யுத்த நடவடிக்கை என்பது, மதவாதம் அல்லது குலவாதத்தை ஏற்படுத்துவது அல்ல. இது பலவாறாக மக்களிடையே ஒழுங்கின்மையை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மிகவும் நுண்ணிய செயற்திட்டமாகும்.

இது பொல்லாத இரத்தம் கொட்டுவதற்குத் தூண்டப்படுகின்ற சிறிய ஒன்று அல்ல. இலக்கு வைத்த மக்கள் குழுமத்திடையே அந்நியோன்ய ஒத்துழைப்பை மேம்படுத்தும்விதமாக, அவர்களது மனவலிமைக்குத் தீங்கெதுவும் ஏற்படாத விதமாக ஏற்பாடு செய்யப்படும் ஒரு அமைப்பு செயலாகும். அது எவ்வாறிருப்பினும் இது போன்ற ஒழுங்கின்மையை முதன்மைப்படுத்திக் கொலைகளை, இரத்தம் சொரிதலை ஏற்படுத்தக்கூடும். இதற்கு உதாரணமாக ஈராக்கில் நடந்து வரும் மோதலைக் காணலாம். அங்கு சுனி மற்றும் ஷியா முஸ்லிம்களிடையே மோதல் நிலவிவருகிறது. சதாமின் ஆட்சியில் இவ்வாறான கலவரங்கள் இருக்கவில்லை.

அமெரிக்கப்படைகள் ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர் சிலகாலம் இந்த மோதல் நிலவவில்லை. அந்தக் காலப்பகுதியில் சி.ஐ.ஏ அமைப்பு, சுனி மற்றும் ஷியா குழுக்களின் வேறுபாடுகளை ஆராய்ந்தது. அதன்படி நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த செயற்பாடுகளில் அமெரிக்கப்படை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறைந்திருந்தன. இந்த மோதல் முடிவுக்கு வரும் வரை அமெரிக்கப்படைகள் ஈராக்கில் தங்கியிருப்பதற்குக் காரணமுண்டு. இதன் மூலம் ஈராக்கில் நிலவுகின்ற அமெரிக்க எதிர்ப்புகள் கரைந்து போகும். மக்களது நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை வெற்றிகொள்ள வேண்டுமென இங்கு முதலில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இதனை எவ்வாறு செய்யவேண்டும். இதன் போது முப்படைகள் மற்றும் பொலிஸ் எதிர்த்தரப்பை விட முக்கியத்துவமும், பலமும் நிறைந்தவர்களென்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுது நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டு தகவல்கள் பெருக்கெடுத்துவிடும்.

யுத்த ரீதியில் நலிவடைந்த படையினர் பற்றிய நம்பிக்கையை பழுதாக்கும் தகவல்கள் கிடைப்பதை தடுக்கவேண்டும். இதனை நீண்ட கால அடிப்படையில் கவனித்தால் மிகப் பெரிய நட்டமாகும். உளவியல் நடவடிக்கையின் போது கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள் பல நிலவுகின்றன.

இதனை மேலே விபரிக்கப்பட்ட இலக்குகள் இரண்டுடன் பங்கிடலாம்.

மக்களை வெற்றி கொள்ளும் போது செய்ய வேண்டிய செயல்கள் என்ன? பொது மக்களிடையே அரசு சார்பாக குழுக்கள் உண்டு. இவர்களது பக்கம் சார்ந்த தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும். இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ, சில பரிசுகளை அவர்களுக்கு அன்பளிப்புச் செய்ய வேண்டும். அது போன்ற பக்கச் சார்பற்ற குழுவினரும் உண்டு. அவர்களுக்கு சந்தேகம் தீர விளக்க வேண்டும். அதாவது படையினர் சில நடவடிக்கைகளை அவர்களது நன்மைக்கே மேற்கொள்கின்றனர் என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் வீதித் தடைகள் போடப்படுவது மக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதற்காக அல்ல எனவும், அது எதிரிகளை அழிப்பதற்கெனவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது இறுதியானதெனவும், உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டும்.

சண்டைகள் இடம்பெறும் இடங்களில் நடவடிக்கைகளில் ஈடுபடும் சிப்பாய்கள் கடுமையான ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும். சுற்றிவளைப்பு, தேடுதல் போன்ற நடவடிக்கைகளில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இராணுவத்தில் செயற்படுத்தப்படும் வேலை ஒழுங்குகள் மற்றும் அரசியல் இலக்குகள் என்பன கீழ் மட்டத்திலுள்ள சிப்பாய் வரைக்கும் விளக்கப்படவேண்டும். பொது மக்களது சம்பிரதாயங்களை விளங்கிக்கொள்ளுதல், சிப்பாய்களின் பணியின் ஒருபங்காக இருக்க வேண்டும்.

உரிய நடவடிக்கையின் முதுகெலும்பாக விளங்குவது உளவுப் பிரிவு. இதன் மூலம் அமைப்பில் நிலவுகின்ற நலிவுகளை நிவர்த்தி செய்ய முடியும். அந்தத் தகவல்கள், அமைப் புகள் குழுக்களை உடைக்கவேண்டும். உளவியல் நடவடிக்கைகள் உண்மையை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்படவேண்டும். பொய்யான செயன்முறையின் மூலம் நீண்ட கால பிரயோசனங்களைப் பெற்றுக்கொள்ளமுடியாது.

ஊடகத் தேவையை அதியுச்சமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தொடர்ச்சியாகச் செய்கின்ற பிரசாரத்தின் மூலம், எதிரிக்கு தகவல் கிடைக்கும் ஊடகத்தை இந்த நடவடிக்கைக்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவத்தின் ஒழுக்கமின்மை குறித்த செய்திகள் பரவலாம். இவற்றுக்கு பதில் வழங்கவேண்டிய செயல் ஒழுங்குகள் அவசியமானது. இதன் போது ஊடகங்களை பேசுவது. எச்சரிக்கை செய்யக் கூடாது. அவற்றுக்கு பதில் வழங்கும் உளவியல் வழிநடத்தல் அவசியமானது.

உண்மையான பிரசாரத்தால் எப்பொழுதும் சிப்பாய்களின் மனோவலிமை உடையமாட்டாது. தொழில் ரீதியான சிப்பாய்கள் ஒழுக்கத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். குற்றம், குறைகளை கண்டவுடன் மாத்திரம் சலனப்படுபவர்கள் அல்ல. எனவே மனவலிமையை உடைத்து வீழ்த்துகின்ற செய்திகளை வெளியிட வேண்டாமெனக் கூறுவது இராணுவத்துக்குச் செய்யப்படும் அவமானமாகும். ஏனெனில், அதனால் பலவீனமான நபர்களே உடைந்து விழுவர். அதற்குப் பதிலாக இராணுவத்துக்கு மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிகழ்ச்சிகளை தயாரித்துக் கொள்ள வேண்டுமெனக் கூறவேண்டும்.

உளவியல் வழிநடத்தல் பிரிவின் முன்னணி அமைப்பு இன்று அமெரிக்காவில் இருக்கிறது. உலகத்தை தமது ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டு வருவதற்காக கோடிக்கணக்கான பணத்தை இதற்காக செலவிடுகின்றனர். அவர்கள் உலக மக்களின் அபிப்பிராயத்தை கட்டியெழுப்புகின்றனர். அதன் மூலம் அவர்கள் உலக பொலிஸ்காரனின் பங்களிப்பை, அதற்கேற்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அவர்கள் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை தமது ஆயுதமாகப் பாவிக்கின்றனர்.

அமெரிக்காவில் உள்ள சுதந்திரத்தின் உருவமும் உளவியல் வழிநடத்தலின் ஒரு உபாய மார்க்கம் மாத்திரமே. அதனுள் அமெரிக்க மக்களிடையே அமெரிக்க சுதந்திரத்தின் மறு உருவம் என்ற கருத்தை நிரூபித்துள்ளனர்.

யுத்தம் நடந்த நேரத்திலும், அதன் பின்னரும் சதாமை அவமானப்படுத்த உளவியல் வழிமுறைகளைப் பயன்படுத்தினர். தெரிந்தெடுத்த இடங்களில் இரசாயன ஆயுதங்கள் மற்றும் அணு ஆயுதங்களின் மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன. செய்மதி மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களை அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் கொலின் பவல் ஐ.நா சபைக்கு கொண்டு சென்று ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் மற்றும் அணு சக்தி ஆயுதங்கள் உள்ளதாகத் தெரிவித்தார்.

அல் - ஜசீரா தொலைக்காட்சி சதாமை மிகவும் பலம் வாய்ந்தவராக பிரசாரப்படுத்தியது. ஆனால் இறுதியில் அவை அனைத்தும் மாயைகள் என வெளியாகியது.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதிகளில் விடுதலைப் புலிகளும் இது போன்ற பொய்யான செயற்பாடுளை மேற்கொண்டனர். ஆனையிறவுப் பகுதிகளில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பிரதேசத்தில் பசீலன் - 2000 ரக பீரங்கிகள் தாக்குதலுக்காக வைக்கப்பட்டுள்ளதாக வானத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் போது தெரியவந்தது. இதையடுத்து விமானப்படை பலம்மிக்க தாக்குதலை மேற்கொண்டது. ஆனால், தாக்குதலின் இறுதியில் அது உண்மையான ஆயுதங்கள் அல்ல, மாதிரிகள் என்பது தெரியவந்தது. விடுதலைப் புலிகள் அப்போது பாரியளவில் உளவியல் யுத்த வழி நடத்தலை மேற்கொண்டனர் என்பது இதன் மூலம் தெளிவாகியது. இந்த மார்க்கத்தை சதாமின் முன்மாதிரியைப் பின்பற்றி விடுதலைப் புலிகள் செய்திருக்கலாம்.



1984,1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் தமது தரப்பில் பெருமளவானோர் உள்ளனர் என்பதை தெரியப்படுத்தும் வகையில் பட்டாசுகளை பாரியளவில் வெடிக்க வைத்தனர். இதன் மூலம் படையினர் தாக்குதல்களை மேற்கொள்வதைத் தடுப்பதில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டனர். இதன் போது உளவியல் யுத்த முறை பயன்படுத்தப்பட்டது.

வடக்கில் பல இடங்களில் இராணுவம் முன்னேறுவதைத் தடுப்பதற்கு சிப்பாய்களின் மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன. இதனால் இராணுவம் முன்னேறாததுடன் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அது போன்ற உளவியல் நடவடிக்கைகள் எடுப்பதும் அவசியமானது.

யுத்த காலப்பகுதியில் பூநகரி மற்றும் ஆனையிறவு பிரதேசங்களில் விடுதலைப் புலிகளால் வேறுபல உபாயங்களும் பயன்படுத்தப்பட்டன. தங்களது தகவல் பரிமாற்றக் கருவிகள் மூலம் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மிகப் பெரியளவில் தகவல்களை பரிமாறிக் கொண்டனர். இவை இராணுவச் செய்திப் பரிமாற்றமுறைகளை வந்தடைந்தன.

அதன்படி இராணுவம், விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள உடனடியாகத் தயாராகும். ஆனால், விடுதலைப் புலிகள் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளமாட்டார்கள். இரண்டு, மூன்று நாட்கள் இவ்வாறு இருக்கும் போது இராணுவம் களைப்படைந்துவிடும்.

அந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையான தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும். இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் போது, ஒரு வானொலிச் சேவையையும் விடுதலைப் புலிகள் பயன்படுத்தமாட்டார்கள். இது போன்ற நடவடிக்கைகள் ரேடியோ சமர் (RADIO BATTLE) என அறிமுகப்படுத்தப்படுகின்றன.

எனவே, புலிகளைச் தோற்கடிப்பதற்கான ஒரு சிறந்த உளவியல் நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்வது தான் இந்தக் காலத்தில் தேவையாகவுள்ளது.

தமிழில்
வல்லையூரான்

# அ.தி.மு.க. மீதான குற்றச்சாட்டை திசைதிருப்ப ம.தி.மு.கவை இணைத்துள்ளார் ஜெயலலிதா

## என்கிறார் கருணாநிதி



சென்னை—

தேர்தல் பிரசாரத்தில் அ.தி.மு.க மீதான குற்றச்சாட்டுகளைத் திசைதிருப்ப வேண்டும் என்பதற்காகத்தான் ஜெயலலிதா ம.தி.மு.கவை கூட்டணியில் சேர்த் துக் கொண்டார் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறினார்.

தி.மு.க சார்பில் பிரசாரப் பொதுக் கூட்டங்களில் பங்கேற்கும் பேச்சாளர்களின் ஆலோசனைக் கூட்டம் அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் நடந்தது.

தேர்தல் பிரசாரத்தில் யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசக்கூடாது, தி.மு.க அரசில் செய்த நல்ல திட்டங்களைப் பற்றிப் பேச வேண்டும், அ.தி.மு.க ஆட்சியிலுள்ள அவலங்களைப் பற்றிப் பேசவேண்டும் என்றெல்லாம் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, கட்சியின் கொள்கைகள், திட்டங்களைக் குறை கூறுவதை விட, தனிப்பட்ட முறையில் கருணாநிதியின் குடும்பம் பற்றிப் பேசுவதனால், அவரைப் பற்றியும் மேடையில் பேசவேண்டும் என சில பேச்சாளர்கள் ஆவேசப்பட்டனர்.

இதற்கு கருணாநிதி அளித்த விளக்கத்தில் -

ம.தி.மு.கவை சேர்த்துக் கொள்வதால் அ.தி.மு.க கூட்டணியின் பலம் அதிகரிக்காது என்பது ஜெயலலிதாவுக்கும் தெரியும். அவர் ஏற்கனவே உளவுத்துறை மூலம் ஆய்வு நடத்தி விட்டார்.

இருந்தாலும், தி.மு.க கூட்டணியில் இருந்து ம.தி.மு.க விலகிச் சென்று அ.தி.மு.க கூட்டணியில் சேர்ந்தால், தி.மு.க கூட்டணிக் கட்சிகளின் கோபம் ம.தி.மு.க மீது திரும்பும் என்ற எண்ணத்தில் அவர் ம.தி.மு.க வுக்கு இடம் தந்திருக்கிறார்.

இதனால், அ.தி.மு.க மீதான குற்றச்சாட்டுக்கள் பொதுக்கூட்டங்களில் அதிகம் பேசப்படாது என்பது ஜெயலலிதாவின் எண்ணம்.

1996 முதல் 2001 வரையில் தி.மு.க ஆட்சியில் நிறைய நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், எதிர் அணியில் கூட்டணிப்பலம் அதிகமாக இருந்தது. அதனால் தி.மு.க வெற்றி பெற முடியாமல் போனது.


எனவே, தனித்துப் போட்டியிட்டு ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை உருவாகும் வரை கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு தேவை.

கூட்டணிக் கட்சிக்கு தொகுதி ஒதுக்கப்பட்ட இடங்களில் தி.மு.கவினர் வருத்தத்தில் இருப்பார்கள். அவர்களை சமாதானப்படுத்த வேண்டும். அதேசமயம், கூட்டணிக் கட்சிகளிடம் உரசல் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

மேடையில் பேசும்போது வார்த்தைகளை கவனமாகக் கையாளவேண்டும். தவறாக ஒரு வார்த்தை வந்துவிட்டால் கூட அது பெரிதாகப் பேசப்படும். எனவே, கவனம் அவசியம் என கருணாநிதி வலியுறுத்தினார்.

# வேதாகமப்படி ஒழுக்கமாக வாழ்ந்தால் உயர்த்தப்படுவோம் என்கிறார் வைகோ

குரும்பூர்—



கிறிஸ்தவ வேதாகமப்படி ஒழுக்கமாகவும்,நேர்மையாகவும் இருந்தால் உயர்த்தப்படுவோம் என்று ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ கூறி னார்.

தூத்துக்குடியில் நடந்த சிறப்பு பிரார்த்தனைக் கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ கலந்து கொண்டு பேசியதாவது -

இயேசுவின் வாழ்க்கை எல்லோருக்கும் தெரியும். அவர் மனிதனுக்காகவே உயிர்நீத்து,மீண்டும் உயிர்த்தெழுந்து மக்களுக்கு நல்ல போதனைகளை செய்து வந்தார்.

நான் பகுத்தறிவாளன். ஆனால் நான் எந்த ஒரு மதத்தையும் இழிவாகவோ, பழித்தோ பேசுவது கிடையாது. எல்லா மதத்தையும் நான் ஏற்றுக் கொள்ளக்கூடியவன்.

எனவேதான், நான் எல்லோரிடமும் சாதியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ மோதல்கள் வேண்டாம். எல்லா மதத்தவர்களும் விரோதம் பார்க்காமல் அன்புடன், மனிதநேயத்துடன், ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதைதான் உணர்த்துகிறது. கிறிஸ்தவ மதக் கோட்பாடு அன்பாய் இருங்கள் என்பதைத் தான் உணர்த்துகிறது. இந்தக் கோட்பாடுகளை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

இந்த நேரத்தில் எனக்கு வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள யோசப்பின் வாழ்க்கை வரலாறு நினைவுக்கு வருகிறது.

யோசப்பு ஒழுக்கமாகவும், துன்பம் வரும்போது நேர்மையாகவும், சிறையில் இருந்தபோது புத்தி சாலித்தனமாகவும் இருந்தார். அவ்வாறு இருந்தால் நாமும் உயர்த்தப்படுவோம். அந்த வேதவாக்கின்படியே நாம் வாழ வேண்டும்.

நீ கொஞ்சத்தில் உண்மையாக இருந்தால் உன்னை அநேக தேசத்துக்கு அதிபதியாக்குவேன் என்று வேதாகமத்திலுள்ளது. அதன்படி உண்மையாகவும் ஒழுக்கமாகவும் இருக்கவேண்டும். கிறிஸ்தவ மார்க்கம் அன்பைப் போதிக்கிறது.

இந்தியாவில் வாழும் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழவேண்டும். அதற்கு சாதி, மத வேற்றுமை துறந்து எல்லோரும் மனிதர்கள் என்ற மனிதாபிமானத்துடன் வாழவேண்டும். நாட்டில் அமைதி நிலவ வேண்டும். சாதி,மத,பூசல் ஏற்படாமல் இருக்க இயேசுவின் போதனைகள் வழி வகுக்கிறது என வைகோ மேலும் கூறினார்.

# அ.தி.மு.க ஆட்சி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கிருஷ்ணசாமி வேண்டுகோள்



சென்னை—

அத்துமீறும் செயல்களில் ஈடு படும் அ.தி.மு.க. ஆட்சி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் எம்.கிருஷ்ணசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் - தேர்தல் விதிகளை தேர்தல் ஆணையகம் தெளிவாக வெளியிட்ட பிறகும், இந்த அரசு இலவச சைக்கிள்களை மாணவர்களுக்கு வழங்க பகிரங்கமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.


தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு அந்த சைக்கிள்கள் லொறிகளில் அனுப்பப்பட்டு மாணவர்களுக்கு வழங்க எற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் எதிராக சவால்விடும் அ.தி.மு.க ஆட்சி மற்றும் கட்சியினரின் இந்த நடவடிக்கையின் மேல் தேர்தல் ஆணையகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிருஷ்ணசாமி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




# எம்.ஜி. ஆரின் பின் சொந்தப் பணத்தில் அரசியல் நடத்துகிறாராம் விஜயகாந்த்

விழுப்புரம்—



தமிழககத்தில் எம்.ஜி.ஆருக்கு பின்னர் சொந்தப் பணத்தில் நான் மட்டுமேஅரசியல் நடத்துகிறேன் என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்தார். பிரசாரக் கூட்டமொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

தே.மு.தி.க. எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டணி வைக்காது என்று கட்சியை தொடங்கியதிலிருந்து திட்டவட்டமாக கூறிவருகிறேன். ஆனால் நான் ஒரு கட்சியுடன் கூட்டணி அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன.

எம்.ஜி.ஆர் தனது சொந்தப் பணத்தில் அரசியல் நடத்தினார். அவருக்குப் பிறகு நான் மட்டுமே சொந்தப் பணத்தில் கட்சி நடத்துகிறேன். அவரது ஆட்சிக்குப் பின்பு பாடசாலைகளில் ஆசிரியர்கள் நியமிக்கப் படவில்லை. தற்போது 10 ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டிய பல பாடசாலைகளில் 5 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

தி.மு.க, அ.தி.மு.க மக்கள் நலன்களை கவனிக்கவில்லை. ஆகவே, இந்த இரு கட்சிகளுக்கும் ஓய்வு கொடுங்கள். தமிழகம் முன்னேற வேண்டுமானால் தே.மு.தி.கவுக்கு இந்த தேர்தலில் வாக்களியுங்கள்.

50 கட்சிகள் சேர்ந்தாலும் தே.மு.தி.க வை இனி அசைக்க முடியாது. நடிகர் சங்கத்தின் கடனை அடைத்த நான்- நாட்டு மக்களுக்காக பாடுபட வந்துள்ளேன்.

நான் அரசியல் நடத்தி பிழைக்க வரவில்லை. மக்களுக்காக உழைக்க வந்துள்ளேன் எனத் தெரிவித்த விஜயகாந்த் - தன் பேச்சை முடிக்க முன் இந்தத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு வாக்களியுங்கள் என்றார்.

தான் தவறாகப் பேசியதை உணர்ந்த விஜயகாந்த் உடனே சுதாரித்துக் கொண்டு நானே தவறுதலாக கூறிவிட்டேன். இந்த ஒரு முறை தேசிய முற்போக்கு திராவிட கழக கட்சிக்கு வாக்களியுங்கள் என்றுபின்னர் கூறினார்.

# அ.தி.மு.கவிற்கு அரசியல் எதிரி தி.மு.க என்கிறார் ஜெயலலிதா



சென்னை—


அ.தி.மு.கவின் பரம்பரை எதிரி தி.மு.க தான் என்று முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

நிருபர்களிடம் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் கூறியதாவது -

நடிகர் விஜயகாந்த் தனித்து தேர்தலில் போட்டியிடுவது பற்றி கேட்கிறீர்கள். பொறுத்திருந்து பாருங்கள். அ.தி.மு.கவைப் பொறுத்தவரையில் நாங்கள் அரசியல் ரீதியான எதிரி என தி.மு. கவை மட்டுமே கருதுகிறோம். அ.தி.மு.கவுக்கும், தி.மு.கவுக்கும் இடையே தான் போட்டி. எங்கள் பரம்பரை எதிரி தி.மு.க. தான். எங்கள் எதிரியைச் சந்திக்கும் கடைசித் தேர்தல் இதுதான். தி.மு.கவில் - மு.க.ஸ்டாலினை முன்னி லைப்படுத்துவது பற்றி பிரசாரம் செய்வீர்களா என கேட்கிறீர்கள் அதைப்பெரிய விஷயமாக நாங்கள் எடுத்துக்கொள்ளமாட்டோம் எனத் தெரிவித்தார்.

# உலக அரங்கில்

## காணாமற் போயுள்ள லைபீரிய முன்னாள் ஜனாதிபதி



அபுஜா—

நைஜீரியாவில் தஞ்சமடைந்திருந்த லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர் காணாமற்போயுள்ளார்.

லைபீரியாவில் ஜனாதிபதியாக இருந்த வேளை சாள்ஸ் ரெய்லர் கொடூரமான ஆட்சி புரிந்ததை எதிர்த்து அவருக்கெதிராக இடம்பெற்ற புரட்சியையடுத்து அவர் நைஜீரியாவுக்கு தப்பியோடினார்.

எனினும், அவரது பதவிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் தொடர்பாக விசாரணை நடத்த லைபீரிய அரசு நடவடிக்கை எடுத்ததுடன், அவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு நைஜீரிய அரசையும் கேட்டிருந்தது.

இந்த நிலையிலேயே இவர் காணாமற் போயுள்ளார்.

## இஸ்ரேலிய தேர்தலில் ஷரோனின் கட்சி வெற்றி


AP

டெல்அவிவ்—

இஸ்ரேலிய பொதுத் தேர்தலில் பிரதமர் ஏரியல் ஷரோனின் கதீமா கட்சியின் வேட்பாளரான எகுட் ஒல்மேட் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றி இஸ்ரேலில் புதிய அத்தியாயத்தைத் தொடக்குவதற்கான முதற்படியென எகுட் ஒல்மேட் தெரிவித்தார். அத்துடன், இஸ்ரேலுக்கான நிரந்தர எல்லைகள் எதிர்வரும் 2010 ஆம் ஆண்டுக்குள் அமைக்கப்படுமென்ற தனது தேர்தல் வாக்குறுதியை அமுல்படுத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பலஸ்தீனத்துடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும், தன்னால் முடிந்தால் அதனைத் தனித்துச் செய்யத் தயாரெனவும் அவர் தெரிவித்தார்.

## மத்திய பிரதேசத்திலும் பறவைக் காய்ச்சல்!


AFP

டெல்கி—

இந்தியாவின் மத்திய பிரதேசத்திலும் பறவைக் காய்ச்சல் பரவியது இனங்காணப்பட்டதையடுத்து அங்குள்ள ஏழாயிரம் கோழிகளைக் கொல்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இச்சாபூர் நகரிலுள்ள கோழிப் பண்ணையொன்றில் நடத்தப்பட்ட பரிசோதனையில் பறவைக்காய்ச்சல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தியாவில் முதலாவதாக பறவைக் காய்ச்சல் ஏற்பட்ட மாநிலமான மகாராஷ்டிராவின் ஜாஸ்கான் மாவட்டத்துக் கருகில் தற்போது பறவைக்காய்ச்சல் இனங்காணப்பட்ட இச்சாபூர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வாழைச்சேனை சுற்றிவளைப்பு விடுதலைப் புலிகள் கண்டனம்!

மட்டக்களப்பு—

வாழைச்சேனையில் படையினர் மற்றும்கருணாகுழுவினர் இணைந்து நேற்று முன்தினம் அதிகாலை சுற்றி வளைப்பு நடவடிக்கை மேற்கொண்டமை மற்றும் பொதுமக்களை மிரட்டியது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டனத்தை வெளியிட்ட தோடு - இது தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் -

நேற்று முன்தினம் அதிகாலை வாழைச்சேனை விநாயகபுரம், கண்ணகிபுரம் ஆகிய இரு கிராமங்களையும் இராணுவமும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஊர் எல்லைகளைச் சுற்றிவளைத்து நிற்க கருணா குழுவினரும் மற்றும் ஆயுதக் குழுவினரும் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று சோதனையிட்டு வயது வித்தியாசமின்றி ஆண்களை அங்குள்ள இந்து ஆலய முன்றலுக்கு பலவந்தமாக அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தினர்.

வீதியில் சுற்றி வளைப்புக்காக நின்ற இராணுவத்தினரும், புலனாய்வுத்துறையினரும் வீதியால் சென்று கொண்டிருந்த அரச ஊழியர்களையும், ஆசிரியர்களையும் மறித்து அவர்களை அச்சுறுத்தி, வற்புறுத்தி ஆலய முன்றலுக்கு அனுப்பினர். இதனால் அவர்களது கடமைகள் அனைத்தும் முடக்கப்பட்டிருந்தது.

ஆலயமுன்றலில் கருணா குழுவைச் சேர்ந்த பிரதீபன், ஜெயந்தன், அஜித், ரஞ்சித் ஆகியோருடன் ஈ.என்.டி.எல்.எவ். ஐச் சேர்ந்த சிவாஜி, சித்தா ஆகியோரும் இருந்ததாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் இந்தக் கூட்டத்தில் பேசும் போது - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எவராவது ஆதரவு நல்கினால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் இதை நாங்கள் ஜெனிவா ஒப்பந்தத்துக்குப் பின்பு நிரூபித்துக் காட்டியுள்ளதாகவும் கூறினர்.

அத்துடன், தங்களை மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள அலுவலகத்தில் சந்திக்கும் படியும், அப்படி சந்திக்க வராதவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மிக வன்மையாக கண்டிப்பதோடு, இது ஒரு பூரண யுத்த நிறுத்த மீறலாகும் எனவும் தெரிவித்து கொள்கின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க ஊடான...

படைகளும், துணைப் படைக்குழுக் களினதும்அடாவடித்தனங்கள்,வன்முறைகள் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் அதிருப்தியை அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிடம் - அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஜெனிவாவில் ஏப்ரல் 19 முதல் 21 ஆம் திகதிவரை நடைபெறும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் தங்களது பேச்சுக் குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தின ஊடாகச் செல்லும்போது பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அரசாங்கமும் நோர்வே அனுசரணையாளர்களும் வழங்க வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் பாலசிங்கம் வலியுறுத்தினார்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு குறித்து அவர்களின் தலைமைப்பீடத்தின் கவலை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஏப்ரல் 6 ஆம் திகதி சந்திக்கும்போது தான் உறுதியாகத் தெரிவிப்பதாக எரிக் சொல்ஹெய்ம் கூறினார்.

தமிழ் துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையாதது தொடர்பிலான வருத்தத்தையும் எரிக் சொல்ஹெய்மிடம் பாலசிங்கம் வெளிப்படுத்தினார்.

இந்தத் துணை ஆயுதக் குழுவினரது ஆயுதங்கள் களையப்படாதவரை நோர்வேயின் சமாதான முயற்சிகள் அடுத்த கட்டத்துக்கு நகராது. ஜெனிவாவில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் பேச்சுக்களில் ஒப்புக்கொண்டபடி துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களை அரசாங்கம் களையாவிட்டால் 2 ஆம் சுற்றுப் பேச்சுக்களும் கண்டிப்பாக துணை இராணுவக் குழுக்களின் ஆயுதக் களைவு பற்றியதாகவே இருக்கும் என்று எரிக் சொல்ஹெய்மிடம் அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பெப்ரவரி பேச்சுக்களுக்குப் பின்னர் நடந்த நிகழ்வுகள் தொடர்பாக இருவரும் விவாதித்தனர். எதிர்வரும் ஏப்ரல் பேச்சுக்களில் விவாதிக்கப்பட வேண்டியவை தொடர்பாகவும், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் இவர்கள் கலந்துரையாடினர்.

விடுதலைப் புலிகளின் இந்த முக்கிய நிலைப்பாடு மற்றும் அவர்கள் தரப்பின் செய்திகளுடன் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வாரம் கொழும்பு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவிக்கவுள்ளார்.

## இன்று...

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் 2 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஆயிரம் நடமாடும் கண்காணிப்பாளர்களும், 250 நடமாடும் கண்காணிப்பு வாகனங்களும் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு 65 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதேவேளை இந்தத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துவிட்டதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

மேலும் இன்று காலை 7 மணி முதல் 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெறும். தொடர்ந்து இன்று 8 மணியளவில் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமாகும்.

முதலாவது முடிவு நாளை அதிகாலை வெளியிடப்படுமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மன்னாரில்...

இதன்போது மூன்று கொக்குகளின் உடல்கள் முழுமையாகவும் சில கொக்குகள் உருக்குலைந்தும் காணப்பட்டன. மேலும் இரண்டு கொக்குகள் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தன.

இந்த கொக்குகளின் உறுப்புக்கள் சேகரிக்கப்பட்டு கண்டியிலுள்ள விலங்கு உற்பத்தி சுகாதார பணிப்பாளருக்கு நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை - கச்சேரி மற்றும் பொலிஸ் நிலையம் என்பவற்றை அண்டியுள்ள பகுதிகளில் பெருமளவான கொக்குகள் அண்மைக்காலமாக இறந்திருந்ததாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்ட கொக்குகள் தொடர்பாக மருத்துவ அறிக்கையின் உண்மைநிலை கண்டறியப்படும் என்றும் அது வரை மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையென மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி சண்முகநாதன் தெரிவித்தார். (மோ)

## முஸ்லிம்...

விளைவாக ஆயுதக் குழுக்களின் தலைமைபீடு அதிகரித்துவிட்டதாக குற்றம் சுமத்தினார்.

## சுவிஸ்...

சுவிஸ் தூதுவர் பெர்னாடினோ ரெகஜ் ஜோனியும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் ஆலோசனை நடத்தினர்.

அண்மையில் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் நடைபெற்ற போதும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதில் அரசாங்கம் முனைப்புடன் இருப்பதாக சுவிஸ் தூதுவரிடம் நிமால் சிறிபால டி சில்வா கூறினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினரின்...

கிப் பிரயோகம் மேற்கொண்டதில் கே.கோவிந்தன் (வயது 32) என்பவர் காயமடைந்து ஏறாவூர் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக் களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதேவேளை, கடற்கரையில் நின்ற மீன்வியாபாரிகள் பலர் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன், இந்தப்பகுதியில் இராணுவமும் பொலிஸாரும் கூட்டாக இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மீனவர்கள் மற்றும் வியாபாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# கண்காணிப்புக்குழு அறிக்கை தயாரிப்பதில் தாமதம்!

கொழும்பு—

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின்போது - தாக்கல் செய்வதற்கான போர்நிறுத்த மீறல்கள் தொடர் பான அறிக்கையைத் தயாரிக்கும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின பேச்சாளர் ஹெலன் ஒலைப்ஸ் டோட்ரயர் கருத்து வெளியிடும்போது:-

ஜெனிவா பேச்சுக்குப் பின்னரான போர்நிறுத்த மீறல்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்துள்ளோம். இருப்பினும், அது தொடர்பிலான அறிக்கையை ஏப்ரல் பேச்சுக்களுக்கு முன்னதாக முடிக்கமுடியுமா என்பதுபற்றி உறுதியாகக் கூறஇயலவில்லை.

ஒவ்வொரு முறைப்பாடு தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு - அது போர்நிறுத்த ஒப்பந்த மீறலா என்பதை இறுதி செய்யக் கால தாமதமாகிறது. இரு தரப்பினரது பல முறைப்பாடுகள் உண்மையாக இல்லை என்பதால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இருதரப்பும் கொடுத்திருக்கும் முறைப்பாடுகளை உரிய விசாரணைகள் இன்றி வெளியிட்டால் இரு தரப்பினர் மீதும் பாரிய அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும்.

இருப்பினும், ஜெனிவா பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் இரு தரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்அறிக்கை தயார்ப்படுத்தப்படாவிட்டாலும் அடுத்தசுற்றுப் பேச்சுக்கள் நடைபெறும் என்று அரசாங்க பேச்சுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# மகிந்தவின் நிலைப்பாட்டை...

கொண்டவிதம் பற்றித் திருப்தி அடைந்துள்ளீர்களா?

பதில்:- ஒரு வகையில் இலங்கையில் வன்முறைச் சம்பவங்கள் கணிசமாக குறைந்து இருக்கிறது. இது ஒரு ஆக்கபூர்வமான விடயம். மறுபக்கம் பார்ப்போமேயானால் இரண்டு தரப்பும் கடந்தமுறை ஏற்றுக் கொண்ட விடயங்களை அமுல்படுத்துவது குறித்து நாங்கள் திருப்தி அடையவில்லை.

இதையே வேறு விதமாக சொல்லப் போனால் நாங்கள் கடந்த பேச்சுவார்த்தையின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை ஆக்கபூர்வமாக கடைப்பிடிக்குமாறு இரண்டு தரப்பிடமும் கோருகிறோம்.

கேள்வி:- இலங்கையின் சமாதான வழிமுறைக்கு நோர்வேயின் சிறப்புத் தூதுவர் நியமிக்கப்பட்டிருப்பது நோர்வேயின் மத்தியஸ்த பணி குறித்து விமர்சித்து வருபவர்களை மறைமுகமாகத் திருப்திப்படுத்தும் நடவடிக்கையாக கருதலாமா?

பதில்:- இல்லை, இது நான் அமைச்சராக ஆனதால் ஏற்பட்ட விளைவு தான். நான் இலங்கைப் பிரச்சினையை தொடர்ந்து கவனிக்க முடியும். ஆனால் ஒவ்வொரு வினாடியும் அங்கே என்ன நடக்கிறது என்பதை என்னால் கவனிக்க முடியாது. எனவே எங்களுக்கு, எங்கள் முயற்சிகளுக்கு உதவ ஒருவர் தேவைப்பட்டார். அதுதான் ஹன்சனை நியமித்திருக்கிறோம். அவர் மத்திய கிழக்குப் பகுதியில் பணியாற்றிய நீண்ட அனுபவம் உள்ளவர்.

கேள்வி:- நீங்கள் விரைவில் இலங்கை செல்லவிருக்கின்றீர்கள். எந்த நோக்கத்துக்காக இந்த விஜயத்தை மேற்கொள்கின்றீர்கள்?

பதில்:- முக்கிய நோக்கம் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து ஜெனிவா பேச்சுவார்த்தைக்கு முன்னர் அவரது கருத்தை அறிந்து கொள்வதுதான். விடுதலைப் புலிகளின் கருத்தை அவரிடமும், அவரது கருத்தை மீண்டும் புலிகளிடம் கொண்டு செல்வதும் தான் இந்தச் சந்திப்பின் நோக்கமாகும்.

கேள்வி:- நீங்கள் அன்ரன் பாலசிங்கத்திடமிருந்து ஏதாவது செய்தியை இலங்கை அரசுக்கு கொண்டு செல்கின்றீர்களா?

பதில்:- விடுதலைப் புலிகளின் சில தகவல்களை அரசிடம் கூற இருக்கிறேன். பிரபாகரன் சார்பாக அன்ரன் பாலசிங்கம் சில கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அந்த விடயத்தை இப்போது ஊடகங்களுக்கு தெரிவிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் 09-04-2006 அன்று முற்பகல் 11 மணிக்கு தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் கணக்காய்வு அறிக்கை சம்பந்தமாக நடைபெறவுள்ளது.

அன்றைய கூட்டத்தில் ஏதேனும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 06-04-2006 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக - நேரிலோ, கடிதமூலமோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும்.

நெறியாளர் குழு கட்டளைப்படி
செயலாளர்.
(5181)

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
10 நாட்கள் மட்டுமே
Fast Track
AIM 01: MICROSOFT OFFICE
Introduction, Word,Excel,Access,Power Point.
AIM 02: HARDWARE & NETWORKING
Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration, Introduction to Networks.
Duration: 10Days - Day & Night Batches
(Day 10.00 am - 1.00 pm, Night 6.00pm-8.00pm)
Starts on 03-04-2006
Director AIMS
#118, பலாலி வீதி,தபால் பெட்டிச் சந்தி அருகில்,
திருநெல்வேலி
Center for FOSS & LAMP

## மரண அறிவித்தல்

### அருட்தந்தை செலஸ்ரின் மேரியோசப்,C.R



தோலகட்டி செபமாலைத்தாசர் துறவு சபையைச் சார்ந்த அருட்தந்தை செலஸ்ரின் மேரியோசப் அடிகளார் 29-03-2006 புதன் கிழமை இறைபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி மனுவல்பிள்ளை வஸ்தியாம்பிள்ளையின் அன்பு மகனும், மாகிறேற், இம்மானுவேல், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, சிறில் (லண்டன்), றீற்றா (கனடா), ஜோர்ஜ், இராஜேந்திரா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற செல்வராஜா, மேரி ஹெற்றீசியா, ராணி, நிர்மலா (கனடா), பெனடிக்ற் (கனடா), காலஞ்சென்ற சோஜினி, ஜெயராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 5, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நல்லடக்கத் திருப்பலி 31-03-2006 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு அங்கு நிறைவேற்றப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும்.

அருள் ஆச்சிரமம்,
இல. 5, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 3351

தகவல்:
அருட்திரு அ.ம.ஸ்ரீபன்,C.R
மாகாண முதல்வர்,
செபமாலைத்தாசர் சபை.
(2232)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.